Registered as a NewsPaper in Ceylon விலை சதம் 15 ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண்; 49
போன் 389

தேசிய தினசரி

மலர் 13
இதழ் 259

யாழ்ப்பாணம் ஐப்பசி 12 றமழான் 9 வெள்ளிக்கிழமை (29-10-71)

உலகப் புகழ்பெற்ற
"ஸ்ரார் மார்க்"
2 கலன் 3 கலன்
ஸ்பிரேயர்
(பீச்சுநீர் தெளிகருவி)
எம்மிடம் கிடைக்கும்
ஸ்டீல்சன்ஸ்
20|5 ஸ்ரான்லி றோட் யாழ்ப்பாணம்
போன்: 7035

# சிகரட், பெட்ரோல் விலை உயர்வு டீசல், மண்ணெண்ணெய்; பழையவிலை!

## சிகரட் ஒவ்வொன்றும் ஒருசதம் அதிகம்

கொழும்பு, வியாழன்

பெட்ரோல்-சிகரட் விலைகள் இன்றுமுதல் அதிகரிக்கப் பட்டுள்ளன. நேற்று அரசாங்கம் விடுத்த அவசர கெஸட் அறிவித்தல் மூலம் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

பெட்ரோல் விலை கூட்டப் பட்ட போதிலும் டீசல், மண்ணெண்ணெய் விலைகள் அதிகரிக்கப்படவில்லை.

லங்கா சுப்பர் பெட்ரோலின் விலை 90 சதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது. சாதாரண பெட்ரோலின் விலை 80 சதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது. சிகரட் புகையிலையின் விலை றாத்தலுக்கு 5 ரூபாய் வீதம் அதிகரிக்கப் பட்டுள்ளது.

சுப்பர் பெட்ரோல் கலன் 5 ரூபாவாகவும் சாதாரண பெட்ரோல் ரூ. 4-55 சதமாகவும் விற்கப்படும். புகையிலையின் விலை அதிகரிக்கப்பட்டிருப்பதால் சிகரட்டுகளின் சில்லறை விலை ஒரு சதத்தால் அதிகரிக்கப் பட்டிருப்பதாக சிலோன் டுபாக்கோ கம்பனி அறிவித்துள்ளது.

## உதவி மந்திரி எச்சரிக்கை

காலி, வியா

இறக்குமதி செய்யப்படும் ஜவுளிகளின் பத்துச்சத விகிதம் தனிப்பட்ட வர்த்தகர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. அதிலும் அவர்கள் கொள்ளைலாபமடிக்கிறார்கள். இதில் அவர்கள் தொடர்ந்தும் ஈடுபட்டால் அவற்றை எடுத்து கூட்டுறவுச் சங்கங்களிடம் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் அரசாங்கத்துக்கு ஏற்படும் என்று உள்நாட்டு வெளிநாட்டு உதவி வர்த்தக அமைச்சர் திரு பி. ஆர். இரத்தினநாயக்கா காலியில் நடந்த கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகிகள் உத்தியோகத்தர்கள் மகாநாட்டில் பேசுகையில் அறிவித்தார்.

உள்நாட்டு உள்ளூராட்சி உதவி அமைச்சர் திரு நீல் டி அல்விஸ் தோட்டத் தொழில் விவகார உதவி அமைச்சர் திரு ஆல்பேர்ட் காரியவாசமும் மற்றும் ஆறு எம். பி. க்களும் கலந்துகொண்ட இக் கூட்டத்தில் திரு பி. ஆர். ரத்தினநாயக்கா மேலும் பேசுகையில் பங்கீட்டுப் பொருள்களை விற்பனை செய்வதுடன் மட்டும் கூட்டுறவுச் சங்கங்கள் திருப்தியடைந்துவிடக் கூடாதென்றும் அபிவிருத்தி வேலைகளில் அதிக பங்கு கொள்ளவேண்டியிருக்கிறதென்றும் கூறினார்.

பெட்ரோல் விலை அதிகரிப்பினால் பொது மக்கள் பாதிக்கப்படமாட்டார்கள் என்றும் மண்ணெண்ணெய் விலை அதிகரிக்கப் படவில்லையென்றும் அமைச்சர் ஒருவர் தெரிவித்தார்.

புதிய வரவுசெலவுத் திட்டம் அடுத்தமாதம் 10-ம் திகதி மக்கள் பிரதிநிதிகள் சபையில் சமர்ப்பிக்கப்படவிருக்கின்றது. அதற்கு முன்பாக புதிய வருமானத்துக்கு அரசாங்கம் இந்த நடவடிக்கை மூலம் வசதி செய்துள்ளது

ஐ. நா. சபைக்கான

## அமெரிக்க உதவி குறைக்கப்படும்? நிக்ஸன் எச்சரிக்கை

நியூயோர்க், அக், 28

ஐ. நா. சபையிலிருந்து தைவான் வெளியேற்றப் பட்டதால் ஐ. நா. வுக்கான அமெரிக்க மானியமும் வெளிநாடுகளுக்கான பொருளாதார உதவிகளும் வெகுவாகக் குறைக்கப்படலாம் என்று அமெரிக்க அதிபர் நிக்ஸன் எச்சரித்திருக்கிறார்.

அமெரிக்கத் தீர்மானம் ஐ. நா. சபையில் தோல்வியுற்றதைத் தொடர்ந்து சபையில் நடந்த ஆர்ப்பாட்டங்கள் குறித்து அதிபர் அதிர்ச்சி தெரிவித்துள்ளாராம்.

ஐ. நா சபை ஒரு சாகிகப் பொம்மையென்று அமெரிக்க உதவி ஜனாதிபதி வர்ணித்திருப்பதாகத் தெரிகிறது.

ஐ. நா கட்டிடத்தை அமெரிக்காவிலிருந்து அகற்ற வேண்டுமென சில அமெரிக்கத் தலைவர்கள் கருத்து வெளியிட்டிருக்கிறார்கள்.

## அடுத்த தேர்தலில் அமைச்சரை ஆதரிக்க எம். பி. வேண்டுகோள்

யாழ்ப்பாணம், வெள்ளி

அடுத்த தேர்தலில் இங்கு அமைச்சர் குமாரசூரியர் போட்டியிடும் நிலைமை ஏற்பட்டால், அவருக்கு உங்களின் முழு ஆதரவையும் வழங்க வேண்டும் என வட்டுக்கோட்டை எம் பி திரு ஏ. தியாகராசா, காரைநகரில் நடந்த தபால் கந்தோர் திறப்புவிழாவில் கூறிய போது அங்கு திரண்டிருந்த மக்கள் பலத்த சுரகோஷம் செய்தனர்.

திரு ஏ தியாகராசா மேலும் கூறியதாவது: எனக்கும் மற்றும் தமிழ்க்காங்கிரஸ் எம் பிக்களுக்கும், அமைச்சர் குமாரசூரியர் உறுதுணையாக இருந்துவருகிறார். அவருக்கு வயது குறைவாகினும் அனுபவ மிக்க திறமைசாலி; சாமர்த்தியசாலி.

70ம் ஆண்டு மே மாதம் பூனைக்கு யார் மணி கட்டுவது என்ற நிலைமை ஏற்பட்டபோது அமைச்சர் குமாரசூரியர் தமிழினத்திற்கு நல்ல வழிகாட்டினார். தமிழருக்கு இந்த நாட்டில் பங்கு உண்டென்பதை எடுத்துக்காட்டினார். அவர் சுதந்திரக்கட்சியை சேர்ந்தவர். நான் தமிழ்க்காங்கிரஸை சேர்ந்தவன். கட்சிப் பேதம் ஒன்றுமில்லை. சமூகப் பிரச்னையையும் பொருளாதாரப் பிரச்னையையும் நாம் ஒன்று சேர்ந்து தீர்க்க வேண்டும்.

சிங்கள மக்களும் தமிழரும், சமமாக வாழக்கூடிய நிலைமையைச் சகோதரர்களாக வாழக்கூடிய நிலைமையை அமைச்சர் ஏற்படுத்திவருகிறார். அவரின் முயற்சிக்கு நாம் முழு ஆதரவையும் வழங்க வேண்டும்.

## "சிங்கள நியந்தனையை தளர்த்துவது மந்திரிசபையில் தங்கியுள்ளது" காரைநகரில் அமைச்சர் குமாரசூரியர்

யாழ்ப்பாணம், வெள்ளி

"தபால் தந்திப்பகுதி ஊழியர்களின் சிங்கள நியந்தனையை தளர்த்துவதுபற்றி மந்திரிசபைதான் தீர்மானிக்க வேண்டும். கடந்த வருடம் நான் இவ்விஷயமாக சிபார்சு செய்தேன். இவ்விடயத்தில் தனிப்பட்டு முடிவு எடுக்கமுடியாது. மந்திரிசபையிலுள்ள அத்தனை பேருக்கும், இவ்விஷயத்தை எடுத்துக்காட்டி அவர்கள் எல்லாரும் ஒன்று சேர்ந்து எடுத்த முடிவாக அமைய வேண்டும் இதனால் காலதாமதம் ஏற்படக்கூடும். மந்திரி சபையின் முடிவு எப்படி அமையும் என்பது நன்றாக தெரியவில்லை. ஆனால் இப் பிரச்னைக்கு கட்டாயம் ஒரு வழிகாணப்படும்".

காரைநகரில் சுமார் ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவில் புதிதாக அமைக்கப்பட்ட தபால்நிலையத்தை திறந்துவைத்துப் பேசிய தபால் அமைச்சர் திரு செல்லையா குமாரசூரியர் மேற்கண்டவாறு கூறினார்.

காரைநகர் சந்தியிலிருந்து தபால் அமைச்சர் குமாரசூரியர் திருமதி குமாரசூரியர் திரு. தபாலதிபர் திருஆகியோர், கண்டியன் நடனமும் நாதஸ்வர இசையும் முன்தொடர அழைத்து வரப்பட்டனர். வழிஎங்கும் பந்தல் அமைக்கப்பட்டு சிகப்பு நீலநிறக்கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. வட்டுக்கோட்டை எம். பியின் காரில் கட்டணி கொடிக்கு அருகில் மட்டும் தான் தமிழ் காங்கிரஸ் கொடிகாணப்பட்டது. மற்ற இடங்களெல்லாம் சிகப்பு, நீலக் கொடியாகவே காணப்பட்டன.

தபால் கந்தோருக்கு உள்ளேயும் வெளியேயும்-அருகே அமைக்கப்பட்டிருந்த பந்தலும் சிகப்பு நீலக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. ஒரு வளைவில் சிகரமொன்று அமைக்கப்பட்டிருந்தது. பெரும் பாலானோர் நீலநிறச் சால்வையுடன் காணப்பட்டனர் மாணவிகளும் நீலநிற உடை அணிந்து காணப்பட்டனர்

தபாற்கந்தோர் வாசலில் தபால் தந்திப்பகுதி அத்தியட்சகர் திரு என் நடராசா பிரதம லிகிதர் குலநாயகம் இருவரும் அமைச்சருக்கு மாலை சூட்டி வரவேற்றனர் அமைச்சர் தபாற்கந்தோரில் ஞாபகார்த்தக்கல் திரை நீக்கம் செய்துவைத்தார். அதன்பின் தபால் கந்தோர் அதிபர் அமைச்சரை உள்ளே அழைத்துச் சென்றார்.

திறப்புவிழாவின் பின் அருகே உள்ள பந்தலில் வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஏ. தியாகராசா தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் அமைச்சர் குமாரசூரியர் கூறியதாவது: தபால் தந்தி ஊழியர்களின் சிங்களநியந்தனையை தளர்த்துவது பற்றி ஆராயப்பட்டு வருகிறது. இதுபற்றி கட்டாயம் அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா நடவடிக்கை எடுப்பார். நானும் சிபார்சு செய்திருக்கிறேன்.

அரசாங்கம், எனது கருத்தையோ அமைச்சர் பண்டாரநாயக்காவின் கருத்தையோ பிரதமரின் கருத்தையோ கொண்டு நடப்பதல்ல. கடந்த அரசாங்கத்தின் வழிப்படி, சட்டத்தின்படி, அமைப்பின்படிதான் இந்த அரசாங்கமும் நடக்கவேண்டும். இப்படியான சட்டங்கள் எனது காலத்தில் நிறைவேற்றப்படவில்லை. முன்

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹரி விளம்பரம்

மோட்டார் வாகனங்கள் மற்றும் சகலவிதமான யந்திரங்களுக்கும் உதிரிப்பாகங்கள் ஜேர்மனியில் பயிற்றப்பட்ட பொறியியலாளர்களின் மேற்பார்வையில் செய்து கொடுக்கப்படும். ஈசுதா மெஷின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3625

## விற்பனைக்கு

'ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் முத்திரை வெளியீட்டுவிழா' நினைவாக சொக்கன் எழுதிய நல்லைநகர் தந்த நாவலர் (குறித்த விலை 1-50) இப்போது ஒரு ரூபாவாக விற்பனையாகின்றது. இச் சலுகை 25-10-71 முதல் 31-10-71 வரை. சண்முகநாதன் புத்தகசாலை யாழ்ப்பாணம். தொலைபேசி: 285. 3685

மயில் மார்க் சந்தனப்பவுடர் நறுமணம் மிக்க சுத்த சந்தனப்பவுடர். உயர்தர சந்தனக் கட்டைகளிலிருந்து யந்திரங்களினால் தயாரிக்கப்பட்டது. கோயில்களிலும் விழாக்களிலும் தினசரி பாவிக்கவும் உகந்தது எஸ். சுப்பிரமணியம் கொம்பனி, யாழ்ப்பாணம். 3624

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

உழுந்தும் பருப்பு வியாபாரத்தில் அதிக இலாபம் அடைய குறைந்த கூலியில் உழுந்து உடைத்துக் கொடுக்கப்படும். நேரில் அல்லது தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும். மூகாம்பிகை கிரைண்டிங் மில்ஸ் 443, கே.கே.எஸ். ரோட் யாழ்ப்பாணம். 3675

## விற்பனைக்கு

ஜேர்மன் (டெமி 1/2) பிளேற்றின் அச்சுயந்திரம் 3 HP லிஸ்டர் என்ஜினுடன். மர எழுத்துக்களும் உண்டு. கலைமகள் அச்சகம், வியாபாரிமூலை, பருத்தித்துறை. 3693

"சன்யோ" ஸ்ரீறியோ றேடியோ கிரும், இரண்டு இணைப்பு ஒலிபெருக்கியுடன் ரூபா 4,500/-, "நிக்கி" தானே இயங்கும் தையல் மெஷின் புதியது மொடெல் இல: 544 ரூபா 3,250/- பிறிஸ்கிஜ் ப்றெஷர் குக்கர் ரூபா 250/-. பற்றறியில் இயங்கும் எடுத்துச் செல்லக்கூடிய றெக்கோட் பிளேயர் ரூபா 300/-(ஜப்பானில் தயாரிக்கப்பட்டது) ஸ்லைட் புரூஜெக்டர் ரூபா 300/- விற்பனைக்குண்டு. இன்றுமுதல் பார்வையிடலாம். 31-10-71க்கு விற்பனையாகும். விலாசம்: U.M. Dora-nagama (E.M.V. Jaffna) சம்பியன் ரோட், கொக்குவில். 3695

ஜனவித நவதானியங்களும். கோழித்தீனி வகைகளும் மஞ்சித்துச்சரக்குவகைகளும், வெவ்வேறு யந்திரங்கள் மூலம் அரைத்துக் கொடுக்கப்படும். விபரங்களுக்கு:- V. சிவானந்தன் மஹேஸ்வரி மில்ஸ், 46/1 பிரவுண் ரோட், யாழ்ப்பாணம். 3694

## விற்பனைக்கு

மானிப்பாய் இந்துக் கல்லூரி, பிரதானவீதி லோட்டன் வீதிக்கடுகாமையில் 5 1/2 பரப்பு காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: ராஜநாயகம் 17/1 ஜெயகொந்தலேன், கொழும்பு-5. 3696

## தேவை

வைத்தறியில் நெசவு செய்ய அனுபவமுள்ள பெண்கள் தேவை. டொபியில் வேலை செய்யக் கூடியவர்கள் விரும்பத்தக்கது. வசந்தபுரம் நிட்டஸ், 7, 2ம் ஒழுங்கை, பிரவுண் வீதி, யாழ்ப்பாணம். 3689

சேரப் செய்வதில் அனுபவம் வாய்ந்தவர் ஒருவர் தேவை அனுபவத்திற்குரிய சான்றிதழ்களுடன், பெற விரும்பும் சம்பளத்தையும் குறிப்பிட்டு 31-10-71க்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 3681 C/O ஈழநாடு, யாழ்ப்பாணம். 3681

## ஆசிரியர் கண்ட முடிபு

V-ம் வகுப்பு மாணவர்களுக்குப் பலர் விளுப்பத்திரங்கள் தயாரித்துள்ளனர். தனித்துவம் மிளிர ஆக்கப்பட்ட விளுப்பத்திரங்கள் எவை?- என ஆசிரியர்கள் பலர் ஆராய்ந்தனர். மாணவர் பரீட்சையில் சரியாக விடை எழுத ஏற்றவை, வே. க. கந்தசாமி (புதுமை லோலன்) ஆக்கியவையே எனக்கண்டனர்.

அதனுல் யாவரும் உபயோகிக்கத் தெரிந்தெடுத்த விளுப்பத்திரங்கள், ஐந்தாந்தர கணிதம், சூழல், தமிழ், இந்து சமயம், ஆங்கிலம் ஆகிய கந்தசாமியின் விளுப்பத்திரங்களே வழிகாட்டியைத் தழுவி, புதுமுறையில் பரீட்சைக்கு வருவன போன்ற விளுக்கள் நிறைந்தவை; வலிமையான கந்தசாமியின் விளுப்பத்திரங்களே! இம்முடிபுக்கு ஆசிரியர்கள் வந்தனர். 5-ம் வகுப்பு மாணவர்களின் கரத்தில் இவ்விளுப்பத்திரங்கள் வந்தன; பரீட்சையும் சுலபமாகிறது. முதற்பிரிவு சித்தியும் நிச்சயமாகிவிட்டது. அன்பு வெளியீடு தந்த நல்ல நூல்கள்! ஸ்ரீலங்கா புத்தகசாலையிலும், மற்றும் புத்தகசாலைகளிலும் பெறலாம்.

## தேவை

தொழிற்சாலையில் வேலை செய்வதற்கு வாலிபர்கள் தேவை. நேரில் மனுச்செய்க, அரஸ்கோ இன்டஸ்றீஸ் பருத்தித்துறை வீதி, நல்லூர். 3697

## திருமண அழைப்பு

### குலசேகரன் — அருந்ததி

எமது புதல்வன் செல்வன் குலசேகரனுக்கும் தாவடி திருநாவுக்கரசு தம்பதிகளின் புதல்வி செல்வி அருந்ததிக்கும் நவம்பர் 1ம் திகதி காலை 10,00- 12,00 மணிக்கும் இடையில் நந்தாவில் அம்மன் கோவிலில் திருமணம் நடைபெறும். நண்பர்கள், உற்ருர், உறவினர்களை அன்புடன் அழைக்கின்றோம் தனிப்பட்ட அழைப்பிதழ்கள் இக்காலத்தையாவும் பாரியாரும், மணியகம் உரும்பிராய். 3691

## பரிசுக் குலுக்கல்

காரைநகர் வடக்கு உதயசூரியன் விளையாட்டுக் கழக நிதிக்காக நண்பர்களுக்கு மாத்திரம் அக்கின் வீதி காமாட்சி வேணியடியில் சென்ற 25ம் திகதி இழுத்த சீட்டிழுப்பில் பின்வரும் இலக்கங்களையுடைய டிக்கட்டுகளுக்குப் பரிசுகள் கிடைக்கின்றன.

1-ம் பரிசு 1913
2 வது பரிசு 2769
3-ம் பரிசு 54
ஆறுதல் பரிசுகள், 2558, 261, 198, 3300, 404, 391 3745, 1157, 1967, 2770, (3098)

உடுவில், வெள்ளி

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உடுவில் கிளையின் உத்தியோக அலுவலகத்தை தபால் தந்தி அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியர் இன்று மாலை உத்தியோக பூர்வமாக திறந்து வைப்பார். மருதனார்மடம் சந்தியிலிருந்து அமைச்சர் ஊர்வலமாக அழைத்து செல்லப்படுவார்.


வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - சௌகார்ஜானகி - ரவிச்சந்திரன் (இரு வேடங்களில்) நடித்த
**காவியத்தலைவி**

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர் — விஜயலலிதா நடித்த
**நூற்றுக்கு நூறு**

தமிழ் நாட்டில் 58 வாரங்களும், ஈழத்தின் தலைநகர் கொழும்பில் 275 நாட்களும் தொடர்ச்சியாக காட்சியளித்து பெரும் சாதனையை நிலைநாட்டி
இப்பொழுது யாழ். மக்களுக்கு விருந்தளிக்கின்றது
லிடோ [யாழ்நகர்]
காலை 10-00 பி. ப. 2-00 மாலை 6-00, இரவு 9-30.
**ஆராதனு**
(சஸ்ட்மன்கலர் சித்திரம்)
ராஜேஷ்கன்னு ★ ஷர்மிளா தாகூர் சுஜித்குமார் ★ பரீடா|ஜலால் நடித்தது.

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள், சனி, ஞாயிறு 4 காட்சிகள்.
இன்றுமுதல்
★ ரவிச்சந்திரன்
★ ஜெயலலிதா
★ நாகேஷ்
★ அசோகன்
★ ஷீலா
நடித்த





**மூன்றெழுத்து**
(ஈஸ்ட்மன் கலர்)

REGAL Jaffna
Daily 5-15 & 7-15 p.m.
Sat-Sundays 10-30 a.m.
Yul Brynner
in
RETURN OF THE SEVEN

தினசரி பி.ப.2-00, 10-00
எம். ஜி. ஆர்.-ஜெயலலிதா நடித்த
**புதியபூமி**
(புதிய கொப்பி)

MANOHARA
Jaffna
Daily 4-45, 7, & 9-45 p m.
Sat. Sundays 10-30 a. m.
Norman Wisdom
in
WHAT IS GOOD FOR GOOSE
(Is a best commedy Film)

வெலிங்டன்
வெல்லிசினிமா
(மானிப்பாய்)
தினசரி 2-30, 6-30, 10-00
எம். ஜி. ஆர். சரோஜாதேவி நடித்த
**பெற்றால்தான் பிள்ளையா**

நாகம்ஸ்சினிமா
கல்லூரை
தினசரி 4-30
சனி, ஞாயிறு 10-30
AMERICA BY NIGHT
தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
**ஐந்து லட்சம்**

**மரவள்ளிக்கிழங்கு**
ஒரு தொன் ரூபா 200-00 வீதம் கொள்வனவு செய்துவருகிறோம்.
தொடர்பு கொள்ளவும்!
ஸ்ரீலங்கா டப்பியோகா புறடக்ஸ்
C/O சுந்தரம் பிறதர்ஸ்,
73, மின்சாரநிலைய வீதி. யாழ்ப்பாணம்.

ராஜா (யாழ்ப்பாணம்)
(தினசரி 4 காட்சிகள்)
எம். ஜி. ஆர்— வி. என். ஜானகி, மாலியா லலிதா பத்மினி நடித்த
**மோகினி**
(புத்தம் புதியகொப்பி)

இன்று திறப்புவிழா
**சாந்தி சினிமா**
சங்கானை
(திறப்பு விழா நேரம் பி. ப. 4-15 மணிக்கு)
தினசரி காட்சிகள் மாலை 6-30 மணி இரவு 9-30 மணி
★ நடிகர் திலகம் சிவாஜி கணேசன்
★ நாட்டியப் பேரொளி பத்மினி
மற்றும் பலர் நடித்த
**விளையாட்டுப் பிள்ளை**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாஹ்யாகான் அழைப்பை ஏற்று

# "யுதாண்ட் வருவதால் பயன் ஏதும் ஏற்படாது"

## வியன்னாவில் பாரதப் பிரதமர்

வியன்னா, அக். 28

ஐ. நா. பொதுச்செயலாளர் யுதாண்ட் கிழக்கு வங்கப் பிரச்னையால் எழுந்துள்ள நிலைமைகளை நேரில் பார்ப்பதற்கு இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் விஜயம் செய்வதால் பயன் ஏதும் ஏற்படப் போவதில்லையென்று இந்தியப் பிரதம மந்திரி ஆஸ்திரியாதலைநகரான வியன்னாவில் தெரிவித்தார்.

இரு நாடுகளதும் எல்லை நிலைமைகளை நேரில் பார்க்க யுதாண்ட் இரு நாடுகளுக்கும் வருகை தரவேண்டும் என்று பாகிஸ்தான் அதிபர் யாஹ்யாக்கான் சமீபத்தில் அழைப்பு விடுத்திருந்தார் அல்லவா? இதுபற்றிக் கருத்து வெளியிடுகையிலேயே பாரதப்பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார். ஆஸ்திரிய பத்திரிகையாளர் கூட்டமொன்றில் அவர் பேசினார்.

யுதாண்ட் விஜயம் செய்வதால் பயன் ஏதும் ஏற்படப் போவதில்லை. ஆனால் பாகிஸ்தான் அதிபர் அழைப்பை ஏற்றுக் கொண்டு இப்படியான விஜயம் ஒன்றை மேற்கொள்வாராலும் நாம் அதை ஆட்சேபிக்கப் போவதுமில்லை என்று திருமதி காந்தி தெரிவித்தார்.

கிழக்குவங்கப் பிரச்னைக்குத் தீர்வு காணுவதற்கான திறவுகோல் பாகிஸ்தான் வசம்தானிருக்கின்றது. அங்கு மக்களால் தெரிவு செய்யப்பட்ட தலைமையை செயல்படாமல் தடுத்து வைத்தது பாகிஸ்தான் அரசுதான். அங்கு எழுந்துள்ள நிலைமைக்கு முற்றிலும் பாகிஸ்தான் அரசுதான் காரணம். பாகிஸ்தானுக்குள்ளேயே அது தீர்க்கப்பட வேண்டும் என்று அவர் மேலும் கூறினார்.

எல்லையில் நிலைமை மிக மோசமடைந்துள்ளது. இதனால் இந்தியாவின் பாதுகாப்புக்கே அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கின்றன என்றார்.

அகதிகள் திரும்பிச் செல்வதை ஐ. நா. மேற்பார்வை செய்ய வேண்டும் என்ற கருத்தை இந்தியா ஏன் விரும்பவில்லையென நிருபர்கள் கேட்டார்கள். இரண்டு நாடுகளையும் ஒரே தராசில் வைத்துக் கணிப்பதைத் தாங்கள் விரும்பவில்லையென்றார் திருமதி காந்தி. பாகிஸ்தான் இரண்டுமுறை இந்தியாமீது படை எடுத்திருக்கின்றது. ஆனால் இந்தியா ஒருமுறையாவது ஆக்கிரமிப்பில் ஈடுபடவில்லையென்றார்.

## அகதிகள் ஏன் ஓடினர்கள்?

கிழக்குப் பாகிஸ்தானில் அரசாங்க தரப்பில் ஒன்றுமே நடைபெற்றிராவிட்டால் ஏறத்தாழ ஒரு கோடி அகதிகள் இந்தியாவுக்கு ஏன் ஓடினார்கள் என்று ஆஸ்திரிய பிரதம மந்திரி டாக்டர் ஜோஸப்கிளாஸ் நேற்று வினவினார். பத்திரிகை நிருபர்களிடம் பேசிய டாக்டர் கிளாஸ் ஒருகாரணமுமின்றி ஒருகோடி மக்கள் அகதிகளாக ஓடியிருக்க முடியாது என்றார்.

ஷேக் முஜிபுர் ரஹ்மான் விடுதலையாவது கிழக்குப் பாகிஸ்தானில் பதற்ற நிலைமை தணிவதற்கு பெருமளவு உதவும் என்று அவர் கூறினார்.

ஒருதலைப்பட்சமாகத்தாம் கருத்து வெளியிடுவதாகக் கொள்ளக் கூடாது என்று கூறிய அவர் விரைவில் பாகிஸ்தான் அதிபர் யாஹ்யாகானுக்குக் கடிதம் எழுதப் போவதாகவும் சொன்னார். பாகிஸ்தான் அதிபர் ஏற்கெனவே தமக்கு ஒரு கடிதம் எழுதியிருப்பதாகவும் அது சர்ச்சைக்குரியதாகவிருப்பதாகவும் அவர் சொன்னார்.

## பாலஸ்தீன இயக்கங்கள் வரவேற்பு

அம்மான், அக். 28

ஐ. நா. சபையில் நவசீனாவுக்கு இடம் கிடைத்திருப்பதை பாலஸ்தீன விடுதலை இயக்கங்கள் வரவேற்றுள்ளன. இஸ்ரேலையும் ஐ நாவிலிருந்து வெளியேற்ற வேண்டுமென்றும் பாலஸ்தீன தேசிய அரசாங்கத்தை ஐ. நா அங்கீகரிக்க வேண்டும் என்றும் இவை கூறியுள்ளன.

## சீன ஆதரவைக் கோருகிறார்

புதுடில்லி, அக். 28

வங்காளதேச மக்களுக்கு ஆதரவு அளிக்கும்படி கம்யூனிஸ்ட் சீனாவை வங்காளதேச அரசின் பிரதமராகப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள திரு தஜ்ருத் இஸ்லாம்கேட்டுக்கொண்டிருக்கிறார்.

விடுதலைக்காக சீன மக்கள் போராடியது போல் இன்று வங்காளதேச மக்கள் போராடி வருகிறார்கள் என்று அவர் தெரிவித்துள்ளார்.

## "குடும்பக்கட்டுப்பாடு அவசியம்"

உடுவில், வியாழன்

இன்று நம் நாட்டில் ஜனப்பெருக்கம் மிக அதிகரித்துவிட்டது. ஜனப்பெருக்கத்திற்கேற்ப பொருளாதார வளர்ச்சியை நாம் இன்றும் பெறமுடியவில்லை. இன்றைய வேலையில்லாப் பிரச்சினை, நிலமற்றோர் பிரச்சனை, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு போன்ற பல பிரச்சனைகளுக்கும் ஜனப்பெருக்கமே காரணம் எனலாம். எனவே இன்றைய நிலையில் குடும்பக் கட்டுப்பாடு மிகவும் அவசியமாகின்றது.

மானிப்பாய் மெம்மோறியல் பாடசாலை ஆசிரியர் திரு. கே. திருநாவுக்கரசு வத்சலா தம்பதிகளுக்கு ஆசிரிய நல்லுறவு மன்றம் அளித்த தேனீர்விருந்து வரவேற்பு விழாவில் மேற்படி பாடசாலை அதிபர் திரு. கயிலாயநாதன் பேசுகையில் இவ்வாறு கூறினர்.

ஆசிரிய நல்லுறவு மன்ற தலைவர் திரு. கே. சின்னத்துரை தலைமை வகித்தார்.

## மான்ரில்கள் மறைந்த மர்மம்

கொழும்பு, வியாழன்

ஆலெடின் விளக்குகளுக்கான மான்ரில்கள் நேற்று திடீரென மறைந்த மர்மம் பாவனையாளர்களுக்கு பெரும் புதிரைக் கொடுத்தது.

4 ஆயிரம் மான்ரில்கள் சில்லறை வியாபாரிகளுக்கு கொழும்பு நகரில் விநியோகிக்கப்பட்டது என்று ஸ்ரீலங்கா அரசாங்க வர்த்தகக் கூட்டுத்தாபனம் அறிவித்தபோதிலும், நேற்று எந்தக் கடையிலும் இந்த மான்ரில்களைப் பெற்றுக் கொள்ளமுடியாமல் போய்விட்டதாம்.

## கடலுக்குள் டிராக்டர் பாய்ந்தது

கேதீஸ்வரம், வியாழன்

திருக்கேதீஸ்வரத்தில் இருந்து மன்னாருக்குச் சென்ற டிராக்டர் ஒன்று தள்ளாடிடிச் சந்திக்கு அப்பால் ஒரு பாதையை விட்டுக் கடலுக்குள் பாய்ந்தது. முக்கால்வாசிப் பாகம் தண்ணீருள் மூழ்கியபோதிலும் பின்புறம் தரையை அண்டிப் புதைந்தது.

## இப்படிக் கோரும்

நியூயோர்க், அக். 28

விடுதலை இயக்கங்களை அங்கது சம உரிமைக் கோரிக்கைகளை எந்த நாடும் நசுக்கி ஒடுக்காதபடி பிரகடனம் ஒன்றை விடுக்கும்படி ஐ. நா. சபையில் இந்தியா கோருமென்று தெரிகிறது.

சமீபத்தில் ஐ. நா. தர்மகர்த்தாக்கள் சபையில் பேசிய இந்தியப் பிரதிநிதி சுபிஷர் அலிகான், காலனி ஆட்சியை எதிர்த்துச் சுதந்திரத்திற்காகப் போராடுவது நியாயமானதென்று ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டது. இந்த தகைய இயக்கங்களை நசுக்குவது வன்முறையாகுமென்று பிரகடனம் செய்யவேண்டிய தருணம் வந்துவிட்டது என்றார்.

## முதல் சந்தர்ப்பத்திலேயே

# பாதுகாப்புச் சபையில் தலைமைவகிக்கும் வாய்ப்பு சீனாவுக்குக் கிடைக்கும்?

நியூயோர்க், அக். 28

ஐ. நா. சபைக்கான மக்கள் சீனக்குடியரசின் தூதுக்குழுவை விரைவில் அனுப்பி வைக்கும்படி பொதுச்செயலாளர் யுதாண்ட் சீன அரசாங்கத்துக்கு மீண்டும் செய்தி அனுப்பியிருக்கிறார்.

ஞாயிற்றுக்கிழமை இரவு நடைபெறவிருக்கும் பாதுகாப்புசபைக்கூட்டத்துக்குத் தலைமை வகிக்கும் சந்தர்ப்பம் மக்கள் சீனக் குடியரசுப் பிரதிநிதிக்கு கிடைக்கக் கூடிய வாய்ப்பு இருப்பதால் யுதாண்ட் இந்த அவசர அழைப்பை அனுப்பியிருக்கிறார்:

யுதாண்ட் ஏற்கனவே அனுப்பியுள்ள அழைப்புக்கு சீனா இன்னமும் பதில் அனுப்பவில்லையென்று தெரிகின்றது.

ஐ. நா. வில் பங்குபற்றவிருக்கும் சீனத் தூதுக் கோஷ்டியின் பிரதமப் பிரதிநிதியாக கனடாவில் தற்பொழுதுள்ள சீனப் பிரதிநிதி நியமிக்கப்படலாம் என்று ஒருசெய்தி அடிபடுகின்றது. அதேசமயம் பீகிங்கிலிருந்து புறப்படவிருக்கும் முதல் தூதுக் கோஷ்டிக்கு சூ என்லாயே தலைமை வகித்து வரக்கூடும் என்றும் சொல்லப்படுகின்றது. இதுவரை சீனத் தூது கோஷ்டி பற்றிய விபரம் உத்தியோக ரீதியில் அறிவிக்கப்படவில்லை.

## பாக்.,ராணுவத்தை முதலில் ஏன் நகர்த்தியது?

நியூயோர்க் அக் 28

எல்லைப்பகுதியிலிருந்து இருதரப்பு ராணுவங்களும் வெளியேற வேண்டும் என்பதில் பாகிஸ்தானுக்கு உண்மையிலேயே ஆர்வம் இருக்குமானால் தன் படைகளை முதலில் ஏன் எல்லைப்புறங்களுக்கு பாகிஸ்தான் நகர்த்தியது?

ஐ. நா.விலுள்ள இந்தியப் பிரதிநிதி திரு. சமர்சென் நேற்று இந்தக் கேள்வியை எழுப்பினார். ஐ. நா. பொதுசபையின் பிரதான அரசியல் கமிட்டியில் திரு. சமர்சென் உரைநிகழ்த்தினார்:

எல்லைப்பகுதிகளுக்கு கடந்த 14ந் திகதிக்குள் பாகிஸ்தான் தனது படைகளை நகர்த்திவிட்டது. தற்காப்பை உத்தேசித்து இந்தியா தனது படைகளை எல்லைகளுக்கு நகர்த்த வேண்டியிருந்தது என்றார் அவர். ஐ. நா. வின் கவனத்தைப் பெறுவதற்காக பாகிஸ்தான் அர்த்தமற்ற குற்றச்சாட்டுகளைச் சொல்லி வருகிறது என்றார்.

### யுதாண்ட் கடிதம்

எல்லையில் ஏற்பட்டுள்ள நிலைமைபற்றி கவலை தெரிவித்து பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் யுதாண்ட் எழுதிய கடிதத்தின் வாசகம் நேற்று ஐ. நா.வில் வெளியிடப்பட்டது.

பதற்ற நிலைமையைப் போக்குவதற்கு தமது நற்பணியை தந்துதவ யுதாண்ட் அந்தக் கடிதத்தில் விருப்பம் தெரிவித்துள்ளார்;

### டிட்டோ பேசுவார்

இப்பொழுது அமெரிக்காவுக்கு வந்துள்ள யூகோஸ்லாவிய அதிபர் மார்ஷல் டிட்டோ கிழக்கு வங்காள நிலைமைபற்றி அதிபர் நிக்ஸனுடன் பேசப் போவதாகத் தெரிவித்துள்ளார். மார்ஷல் டிட்டோ வாஷிங்டன் வந்து சேர்ந்தார்.

டெலிவிஷன் பேட்டி ஒன்றில் பேசிய அவர் கிழக்குவங்கப் பிரச்னையை சர்வதேச சமுதாய உதவியும் ஐ. நா. ஆதரவுமின்றி தீர்க்க முடியாது என்றார். கிழக்குவங்கப் பிரச்னை பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்குமிடையிலான பிரச்னையல்ல. பாகிஸ்தான் ராணுவக் குழுக்கிட்டின் காரணமாகவே அகதிகள் ஓட நேர்ந்தது- இதனால் அது பாகிஸ்தானின் உள்நாட்டு விவகாரமாகவுமில்லை என்று டிட்டோ சொன்னார்.

### உலக சமாதான சபை

கிழக்கு வங்க அகதிகளுக்கு ஆதரவாக [illegible] ஆதரவு காட்டப்பட வேண்டும் என்று உலக சமாதான சபை அறிவித்திருக்கின்றது.

## நிக்ஸன் சீற்றம்

ஐ. நா. சபையிலிருந்து தைவான் வெளியேற்றப் பட்டதைத் தொடர்ந்து நியூயோர்க்கில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களின் போது சில வெளிநாட்டுப் பிரதிநிதிகள் நடந்துகொண்டவிதம் குறித்து அதிபர் நிக்ஸன் சீற்றமடைந்துள்ளார். இந்த ஆர்ப்பாட்டங்களை ரெலிவிஷனில் பார்த்த அதிபர் அதிர்ச்சியடைந்ததாகத் தெரிகின்றது.

ஐ. நா. சபையில் அமெரிக்க தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்த நாடுகள் விஷயத்தில் அதிபர் நிக்ஸன் இவ்வளவு கவலை கொள்ளவில்லையென்று வெள்ளைமாளிகை வட்டாரங்கள் கூறின. மேற்குறித்த நாடுகளுக்கான அமெரிக்க உதவியில் இனிமேல் பெருமளவுக் குறைக்கப்படும் என்றும் கருதப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறுமுகநாவலரும் ஆனந்தக்குமாரசுவாமியும்

# இலங்கையின் இரு தவப்புதல்வர்கள்

[ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், கலாயோகி ஆனந்தக்குமாரசாமி வண. எஸ். மகிந்ததேரர், குமாரதுங்கமுனிதாச, ஆனந்த ராஜகருணா ஆகிய ஐந்து தேசிய வீரர்களினதும் நினைவாக இன்று தபால் முத்திரைகளை வெளியிட்டுக் கௌரவிக்கிறது அரசாங்கம்]



இன்று இலங்கை அரசாங்கம் ஆறுமுகநாவலருக்கும், ஆனந்தக்குமாரசுவாமிக்கும் அஞ்சல்தலை (தபால் முத்திரை) வெளியிட்டுக் கௌரவிக்கிறது வரவேற்கத்தக்க செயல். பாராட்டப்படவேண்டிய விஷயம். இதில் சம்பந்தப்பட்டவர்களெல்லாருக்கும் இந்நாட்டுத் தமிழ் மக்கள் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளனர்.

இவ்விரு பெரியார்களையும் இலங்கை மக்கள் இவ்வளவு காலமும் மறந்திருந்தனர் என்றே சொல்லவேண்டும். காலத்துக்குக் காலம் கட்டுரைகளும் நினைவுநாட் கூட்டங்களும் நடந்தேறியிருந்தாலும் அரசாங்கம் அஞ்சலி செய்யுமளவிற்கு இவர்கள் தொண்டுகள் மக்களுக்கு எடுத்துக்காட்டப்படவில்லை கடந்தபதினைந்து பதினாறு வருடங்களுக்குள்ளாக இவர்கள் இருவரையும் தேசியத் தலைவர்களாகக் கொள்ளக் கூடியவகையில் அறிமுகம் செய்துவைக்கப்பட்டார்கள். ஆறுமுகநாவலர் ஏதோ தமிழுக்கும்சைவ சமயத்துக்கும் தொண்டு செய்த சைவக்குரவர் என்றவகையிலும் ஆனந்தக்குமாரசுவாமி மத்தியகாலச் சிங்களச் சித்திரக் கலையின் ஆசிரியர் என்றவகையிலுமே இந்த நாட்டு மக்கள் முன்பு அறிந்திருந்தனர்.

உதாரணமாக 1965-ம் ஆண்டில் அரசாங்க ஊழியர்களினால் கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நாவலருக்கு விழா எடுக்கு முன்னர் சைவத மக்களல்லாமல் பிறமத இன மக்களுக்கு நாவலரைத் தெரியாமலிருந்தது. நாவலரைத் தேசிய வீரர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்ற கொள்கையை முன்வைத்தவர்கள் தமிழ் அரசாங்க ஊழியர்களே. அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் ஏடான 'எழுச்சி 1966-ம் ஆண்டு நவம்பர் டிசம்பர் மாத இதழும் இந்த நாட்டுத் தேசியத் தினசரியான 14-12-65-ல் வெளிவந்த 'ஈழநாடு' இதழுமே 'தேசிய வீரர் நாவலர்' என்ற கட்டுரைகளை வெளியிட்டு நாவலரைச் சகல மக்களும் அறிந்து போற்றும் வகையில் பணியாற்றின. இன்று ஆறுமுகநாவலர் முத்திரைவெளியிடுவதாக செய்திகள் வெளியானதும் முன்னரங்கில் நிற்போர் 1965-ம் ஆண்டுக்கு முன் ஏதேனும் முயற்சிகள் செய்ததாகத் தெரியவில்லை.

## அவதார புருஷர்கள்

ஆறுமுகநாவலரும் ஆனந்தக்குமாரசுவாமியும் இலங்கை மாதா ஈன்றளித்த இருதவப்புதல்வர்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டு உலகுக்குப் பல பெரியார்களைத் தோற்றுவித்தது. அதே நூற்றாண்டில்தான் உலகில் பெரிய எழுத்துப் புரட்சிகள்,

## வெ. க. நடராசா

செயற்புரட்சிகள், மதப்புரட்சிகள் ஆகிய அனைத்தும் ஆரம்பமாயின; அரசியல் தலைவர்களும் தோன்றினார்கள். ஆத்மீகச் செல்வர்களும் அவதரித்தார்கள். தத்துவ ஞானிகளும், தலைசிறந்த விஞ்ஞானிகளும்கூடப் பிறந்தது கடந்த நூற்றாண்டில்தான்.

கார்ல் மார்க்ஸ், காந்தியடிகள் போன்ற உலகம் போற்றும் உத்தமர்கள் தோற்றியதும், இராமகிருஷ்ணர், விவேகானந்தர், தயானந்த சரஸ்வதி முதலியோர் வாழ்ந்ததும் இந்த நூற்றாண்டில்தான். பாரதியார், ரவீந்திரநாத்தாகூர் முதலிய பாவலர்களும் தோன்றியது கடந்த நூற்றாண்டில்தான். இதே நூற்றாண்டில்தான் ஈழநாட்டில் ஆறுமுகநாவலரும், ஆனந்தக்குமாரசுவாமியும் அவதரித்தார்கள். நாவலர் கடந்த நூற்றாண்டின் முற்பகுதியில், ஆனந்தர் பிற்பகுதியில்.

ஆறுமுகநாவலரும், ஆனந்தக்குமாரசுவாமியும் சாதாரண இரண்டு மனிதர்களாகக் காட்சியளித்தாலும் உண்மையில் இவர்கள் ஈழத்தாயின் இரண்டு சக்திகள். இவர்கள் இருவரும் மனித குலத்துக்காக, தாய்நாட்டிற்காக, தாங்கள் பிறந்த மதத்திற்காக எவ்வளவோ தியாகம் செய்திருக்கிறார்கள்' இவர்கள் இருவரது தொண்டுகள் இக்கால மக்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்கவேண்டும். ஆற்றல் மிக்க அவதார புருடர்களாகிய இவர்களின் தொண்டுகளும் செயல்களும் மறக்கப்படாது நிலைத்திருக்கவேண்டும். எனவேதான் அரசாங்கம்கூட அஞ்சலி செலுத்த முன்வந்தது.

## தோற்றம்

கறுத்த மேனி, படுத்த தலை, நீறுபூசிய நெற்றி, வாட்டசாட்டமான உடம்பு, கொட்டைத்தலை, உருத்திராக்கமாலை. கவிமலைகள், திறந்ததேகம், வீறுகொண்ட நடை, கணீரென்ற குரல், உற்சாகம்கொண்ட தோற்றம், சாதாரண வேட்டியும் சால்வையும் மதத்துறை மந்திரியாக இருந்து பணியாற்றத் தகுந்தவர் மக்களுக்காக வாழுவதற்கு முன்வந்தார். மக்களுக்குத் தொண்டு செய்தேமறைந்தார். இவரே ஆறுமுகநாவலர் - பிறந்த திகதி 18-12-1822. பிறந்த இடம்: தமிழர்கள் தலைநகராம் யாழ்ப்பாணம் - நல்லூர்.

கம்பீரமான தோற்றம், அகன்ற பரந்த வதனம், நீண்ட நாசி, ஒளிவீசும் கண்களுக்கு மேலும் அலங்கரிக்கப்போலும்கண் ஹடி, நிமிர்ந்த நடை. கணீரென்ற குரல், மா நிறம், மேல்நாட்டு உடையுடன் கவர்ச்சியான ஒரு தலைப்பாகை, அரசாங்க திணைக்களத்தை திறம்பட நடத்தும் சக்தி ராஜதந்திரியாகவிருந்து பணியாற்றத் தகுந்தவர் மக்களுக்குத் தொண்டுசெய்தே மறைந்தார். இவரே ஆனந்தக்குமாரசுவாமி பிறந்ததிகதி 22-8-1877 பிறந்த இடம்: இலங்கையின் தலைநகராம்-கொழும்பு மாநகரம்.

இருவரும் இந்து மதத்தினைத் தொண்டுகள் மூலம் அலங்கரித்தவர்கள் என்றே சொல்லவேண்டும். இருவரும் இந்துமதத்திற்குக் கௌரவத்தைத் தேடிக்கொடுத்தவர்கள். தேச நலனுக்காகப் பொதுத்தொண்டுகள் பல புரிந்தவர்கள். இவர்கள் இருவரும் பிறந்த மதத்துக்குமாத்திரமல்லாது பிறமதங்களுக்கும் தொண்டு செய்தவர்கள். எனவேதான் மக்கள் மனதில் எப்பொழுதும் வாழ்ந்துகொண்டிருப்பார்கள்.

## நூல்கள் பல தந்தவர்கள்

இருவரும் செல்வமான குடும்பங்களிலேயே பிறந்திருக்கின்றனர். இருவரும் இளம் வயதிலே விவேகிக… [illegible] …றல்பெற்றும் தேசியப்பற்…

நம் நிரம்பப் பெற்றவர்கள். கணப்பொழுதில் நூல்களைக்கற்க வல்லவர்கள். எனவேதான் பிற்காலத்தில் தலைசிறந்த அறிவாளிகளாகப் போற்றப்பட்டார்கள். இவர்கள் இருவரும் வெளிநாடுகளுக்குச்சென்று வெற்றிச் சங்கு ஊதிய பின்னரும் கூட நாங்கள் அவர்களது பெருமையை, சேவையை மறந்திருந்தோம். அல்லாவிடில் அரசாங்கம் இவர்களைக் கௌரவிக்க வழிவகைகள் பல ஆண்டுகளுக்கு முன்பே செய்திருப்போம். ஆனால் இன்றுதான் அரசாங்கம் அஞ்சலி செய்யுமளவிற்கு அவர்களை உலகிற்குக் காட்ட முன்வந்திருக்கிறோம்.

ஆறுமுகநாவலர் சென்றது அண்மையிலிருக்கும் அக்கால அடிமை இந்தியாவிற்கு. ஆனந்தக்குமாரசுவாமியவர்கள் சென்றது செல்வம் கொழிக்கும் மேல் நாடுகளுக்கும் அக்கால அடிமைஇந்தியநாட்டுக்கும். மேல்நாட்டிற்குச்சென்றவர் மேலை நாகரிகத்தில் மூழ்கிவிடாது கீழைநாட்டு நாகரிகங்களில் அக்கறை கொண்டார். கீழைநாடுகளின் கலை, கலாச்சாரங்களை ஆராயவும் முற்பட்டார். ஆனந்தர் அவர்கள், ஆராய்ந்ததுமல்லாது நூல்கள் பலவும் தந்திருக்கிறார். நாவலரும் அப்படியே சைவாகம நூல்களையும் திருக்குறள் முதலாம் வாழ்க்கை நூல்களையும் ஆராய்ந்து மக்களுக்குப் பயன்படும்படி தந்திருக்கிறார் என்பது தெரிந்ததே.

## தேசிய கலாச்சாரத்தின் மகிமை

நாவலரோ 19-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் பிறந்து 1879வரை தனது தொண்டுகளையும் சேவைகளையும் தனிமையான முறையில் செய்து வந்தார். அவரின் தன்னலமற்றகாரியங்களை உணர்ந்து உதவியளிக்க, ஊக்கம்கொடுக்க முன்வந்தவர்கள் விரல்கொண்டு எண்ணத்தக்க ஒருசிலரே. அக்காலத் தேவையை நாவலர் நன்குணர்ந்து வேண்டியவற்றைச் செய்தார். அவர்காலத்தில் மதநூல்களும்மொழி நூல்களும் மிகமிக அவசியமாக இருந்தன. மொழியையும் மதத்தையும் காப்பாற்ற இவைகள் வேண்டுமென உணர்ந்தார்நாவலர். அவைகளைச் செய்ய ஆர்ப்பாட்டமின்றி அரும்பணியாற்றினார். 'நாவலர்' பட்டம்பெற்றார்.

ஆனந்தக்குமாரசுவாமியோ 19-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில்தோன்றி 1947 வரை வாழ்ந்து லண்டன் பல்கலைக்கழகப் பட்டதாரியாகி விஞ்ஞான கலாநிதிப் பட்டமும் பெற்றார். தாய்நாடுதிரும்பிதாதுப்பொருள் ஆராய்வுத் திணைக்களம்முதலிய பல பகுதிகளில் அதிபராகக் கடமையாற்றினார்.

ஆறுமுகநாவலரும்அநேக கட்டுரைகள் மூலமும் நூல்கள் மூலமும் தனது மதத்தின் சிறப்புக்களையும், செல்வங்களையும், பெருமைகளையும் மக்களுக்கு முன்வைத்துத் தொண்டு செய்தார். ஆனந்தக்குமாரசுவாமியும் கீழைத்தேசக்கலை, கலாச்சாரம் முதலியன பற்றி அனேக ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் நூல்களையும் எழுதிஇந்த நாட்டு மக்களை நமது கலாச்சாரத்தை நன்குணரச் செய்தார். இவ்விரு பெரியார்களும் மேற்கத்திய ஆசிரியர்களின் பழக்க வழக்கங்களையும் கலாச்சாரத்தையும் இந்திய நாட்டினரும் இலங்கையரும் கண்மூடித்தனமாகப் பின்பற்றிக்கொண்டிருந்த வேளையில் தேசிய கலாச்சாரத்தின் பெருமையையும், பெறுமதியையும், தகைமையையும், மகிமையையும் மக்களுக்கு எடுத்துக்காட்டினர்.

## சேவையும் நூல்களும்

ஆறுமுகநாவலரின் சேவைகள் சேய் நாட்டில் மாத்திரமல்லாது தாய் நாட்டிலும் நின்றுவிட்டது. அவர் வாழ்ந்த காலம் அதற்குமேல் சென்று பணியாற்ற இடம் கொடுக்கவில்லை. ஆனால் ஆனந்தக்குமாரசுவாமியவர்களை அமெரிக்காப் பல்கலைக்கழகம் வருந்தியழைத்து நுண்கலை (இந்தியப் பிரிவு) த்துறையின் தலைவராக நியமிக்குமளவிற்கு இருந்தது. இவர் வாழ்ந்த காலம் 20-ம் நூற்றாண்டையும் எட்டிப் பிடித்தால் இவருக்கு இது முடிந்தது

இவர்கள் இருவரும் தோற்றுவித்தபிரபல்யமான நூல்களிற் சில பின்வருமாறு:-

### ஆறுமுகநாவலர் நூல்கள்

1. புனித பைபிள் மொழி பெயர்ப்பு. 2. திருக்குறள்-திருமுருகாற்றுப்படை, 3. தொல்காப்பியச் சூத்திர விருத்தி. சொல்லதிகாரம் முதலியன. 4. சைவ வினாவிடைகள், 5. சைவசமய நெறியுரை. 6. பெரிய புராண வசனம் முதலியன, 7. யாழ்ப்பாணச்சமயநிலை, 8. இலக்கணச் சுருக்கம் வினாவிடை முதலியன. 9. பாலபாடங்கள், 10. நன்னூல். இலங்கை பூமிசாத்திரம் முதலியன.

### ஆனந்த குமாரசுவாமியின் நூல்கள்

1. மத்தியகாலச் சிங்களக் கலை; 2. இந்தியக் கைவினைஞன். 3. இலங்கை - இந்திய மகத்தொழில், 4. இந்து … [illegible] … கட்டுக் கதைகள். 5. … புத்தசமய உண்மைகளும், 6. இந்திய இந்தோனேஷிய வரலாறு, 7. … வம், 8. ராஜபுத்திரின் … ணக்கலை, 9. புத்த விக்… தத்துவங்கள், 10. … தம புத்தரின் வாழ்க்… தத்துவங்கள் முதலியன…

## சமரசக் கொள்கை

ஆறுமுகநாவலர் … கிறிஸ்தவமத புனித … மொழி பெயர்த்ததன் மூ… பிறமதத்துக்குத் தொண்… செய்திருக்கிறார். ஆனந்… குமாரசுவாமியும் பௌ… நூல்களை ஆராய்ந்து … நூல்களை எழுதியதன் மூ… பிறமதத்துக்குத் தொண்… செய்திருக்கின்றார். என… இவ்விருவரையும் … வாதிகளென்று … முடியாது. ஆனால் இருவ… சமரச சன்மார்க்க வா… ளென்றே கருதவேண்… ருக்கிறது.

எனவே ஆறுமுக நா… ரும் ஆனந்தக்குமார சு… மியும் மகான்களல்லவோ … பெரியார்களல்லரோ? … ளவு தலைசிறந்த உத்த… களது ஒரே நோக்கமும் … நாட்டு மக்கள் மேலைநா… நாகரிகத்தில் மூழ்கி… கூடாது என்பதே. இரு… களதும் நூல்களையும் ச… திரங்களையும் ஆராய்… பார்க்குமிடத்து தம் … நாட்டுப் பற்றும் பிற… மதப்பற்றும் உள்ளங்… நெல்லிக்கனி போல … தோற்றுவது புலப்படும்…

## இந்தியப் பிரயாணிகள் கஷ்டம்பற்றி விசாரணை

சேதிவரம், வி… தலைமன்னார் துறைமு… தில் இந்தியா செல்… பிரயாணிகளுக்குரிய … டங்களைப் பற்றி மன்னா… டிலுள்ள தொழிற்சங்… கள் அவ்வப்போது பல… வைகள் புகார்கள் … அவற்றைக் கவனிக்கும… அரசாங்கத்தை வற்புறுத்… யிருந்தன. அவற்றின் … காரம் திரு. எல். எஸ். … சில்வா தலைமையிலான … விசாரணைக்குழு தலைமன்… னார் துறைமுகத்திற்… சென்று விசாரணை … கொண்டது. பயணிக… படும் இன்னல்கள் கவன… கப்பட்டதுடன் இதுபற்றி… சாட்சியங்களும் பதிவு… யப்பட்டன

## நாவலரை வாழ்த்துவமே!

—மேலைப்புலோலி மு. க. கதிர்காமத்தம்பி—

ஞாலம் சிறக்க
நல்ல தமிழ்வாழச்
சீலம் சிறக்க
சிவ நெறியும்சிந்திக்க
காலம் முழுவதும்
கலைவளர் கரைசேர
பாலம் அமைத்த
பண்பார் நாவலரே!

பேயாசை கொண்டு
பெற்ற மதம்மாறி
காசாசை கொண்டு
கன்னித்தமிழ் மறந்து
நீசாசை கொண்ட
நிறவெறியர் தாசர்களிடம்
பேராசை போக்கப்
பொங்கி எழுந்தாரே.

மாடுமனை வேண்டாம்
மக்கள்சுகம் வேண்டாம்
கூடுமுற வெல்லாம்
குந்தி மழவேண்டாம்
நாடு நலம் காட்டும்
நல்ல தமிழ் சைவம்
பீடு தரும் செல்வம்
பெற்றார் அவர்பேறே!

தேனழிந்து சுவைகூட்டும்
திரியெரிந்து ஒளியூட்டும்
வானழிந்து மழைசொட்டும்
வயலழிந்து உணவூட்டும்
ஊனழித்து உயிர்காட்டும்
உத்தமரின் உத்தமரை
நானழித்து நாமோடி
நன்றியுடன் வாழ்த்துவமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாவலருக்கு முந்திய கல்வி முயற்சிகள் — 2

# மாணக்கர் தந்த நூன்முறை

(நேற்றைய தொடர்ச்சி)

மக்கள் கவிமணி
வட்டுக்கோட்டை மு. இராமலிங்கம்

1 மாணவர் தொகை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆதி | வகுப்பு | இன்றைய | 12-ம் | வகுப்பு | 6 |
| 2-ம் | வகுப்பு | இன்றைய | 11-ம் | வகுப்பு | 3 |
| 3-ம் | வகுப்பு | இன்றைய | 10-ம் | வகுப்பு | 4 |
| 4-ம் | வகுப்பு | இன்றைய | 9-ம் | வகுப்பு | 4 |
| 5-ம் | வகுப்பு | இன்றைய | 8-ம் | வகுப்பு | 9 |
| 6-ம் | வகுப்பு | இன்றைய | 7-ம் | வகுப்பு | 9 |
| 7-ம் | வகுப்பு | இன்றைய | 6-ம் | வகுப்பு | 8 |
| 8-ம் | வகுப்பு | இன்றைய | 5-ம் | வகுப்பு | 12 |
| 9-ம் | வகுப்பு | இன்றைய | 4-ம் | வகுப்பு | 15 |
| 10-ம் | வகுப்பு | இன்றைய | 3-ம் | வகுப்பு | 11 |
| 11-ம் | வகுப்பு | இன்றைய | 2-ம் | வகுப்பு | 12 |
| 12-ம் | வகுப்பு | இன்றைய | 1-ம் | வகுப்பு | 12 |
| | | | | | 105 |

2 கற்பிக்கப்பட்ட நூல்கள்

(A) பன்னிரண்டாம் வகுப்பு

1. சூடாமணி நிகண்டுரை. 2. திருக்குறளுரை, 3. நன்னூலுரை. 4. நாலடியுரை. 5. தஞ்சைவாணன் கோவையுரை. 6. புலியூரந்தாதியுரை. 7. பாரதவுரை 8. வைத்தியவிளக்கம் 9. பூமிசாஸ்திரம்.

(B) பதினோராம் வகுப்பு

1. சூடாமணி நிகண்டு. 2. மறைசையந்தாதி 3. வைத்திய விளக்கம், 4. இலக்கணச்சுருக்க வினாவிடை, 5. குறள், 6. எண் 7 நைடதவுரை.

(C) பத்தாம் வகுப்பு

1. நாலடியார் 2. கணக்கு 3. சூடாமணி நிகண்டுரை 4. முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் 5. நல்ல வெண்பா 6. வைத்தியவிளக்கம் 7. பாரதம் வாசித்தல்.

(D) ஒன்பதாம் வகுப்பு

1. நிகண்டுரை 2. கணக்கு 3. திருக்குறள் 4. வைத்திய விளக்கம் 5. திருவள்ளுவ மாலை 6. தஞ்சைவாணன் கோவை 7. பொன்வண்ணத்தந்தாதி 8. நைடதப்பயிற்சி

(E) எட்டாம் வகுப்பு

1. கணக்கு 2. வைத்தியம் 3. மண்டலவன் நிகண்டு 4. மருதூரந்தாதி 5, நைடதம் வாசித்தல்

(F) ஏழாம் வகுப்பு

1. நிகண்டு 2. திருக்கருவையந்தாதி 3. வைத்தியம்.

(G) ஆறாம் வகுப்பு

1. சூடாமணி நிகண்டு 2. திருவள்ளுவமாலை 3. வைத்தியம்.

(H) ஐந்தாம் வகுப்பு

1. வைத்தியம் 2. சூடாமணி நிகண்டு 3. ஆத்திசூடி வெண்பா

(I) நாலாம் வகுப்பு

1. நாலடியார் 2. திருவள்ளுவமாலை

(J) மூன்றாம் வகுப்பு

1. நாலடியார் படித்தல் 2. வள்ளுவர் குறள் படித்தல்.

(K) இரண்டாம் வகுப்பு 1. நன்னெறி கற்றல், 2 வள்ளுவர்குறள் கற்றல்.

(L) முதலாம்வகுப்பு, 1. அரிச்சுவடி.

ஒரு சொற்குவியலாகப் பிரசுரிக்கப்பட்டிருந்த மேலே தந்துள்ள இருபாடல்களையும் நாம்பெயர்த்தெழுதி அனுப்பியபோது அவற்றை வரிவரியாகவும் சீர்பிரித்தும் விளக்கம் எழுதியும் உதவிய உடுப்பிட்டி ஆசிரியர் திரு. கா. நீலகண்டன் அவர்களுக்கும் ஆசிரிய விருத்தத்தின் பொழிப்புரையை நாம் எழுதிக்கொள்ள ஓதி உதவிய வட்டுக்கோட்டை ஸ்ரீ எ. குருமூர்த்தி சிவாச்சாரியார் அவர்களுக்கும் எமது மனங்கனிந்த நன்றி உரியது.

உடுப்பிட்டியிற்பிறிதொரு பள்ளிக்கூடம்

இலங்கைச்சட்ட நிருபணசபையில் தமிழ்மக்களின் பிரதிநிதியாயிருந்தவரும், அத்துவைதத்தும், சட்டநூல்கள் பலவற்றின் ஆக்கியோனுமாகிய காலஞ்சென்ற கௌரவ திரு. க. பாலசிங்கம் அவர்களின் தகப்பனார் வார்காவற்றுறை நீதிவான் கூ. (உடையார்) கதிரவேற்பிள்ளை அவர்களாவர். நீதிவானின் தகப்பனார் வல்வெட்டி, குமாரசுவாமி முதலியார் அவர்களாவர்.

குமாரசுவாமி முதலியாரும் அருளம்பல முதலியாரும் ஒரேகாலத்தில் வாழ்ந்த இருநண்பர்கள், அருளம்பல முதலியாரைப் பாட்டுடைத் தலைவராக வைத்து, அருளம்பலக் கோவை பாடியவர் குமாரசுவாமி முதலியார் அவர்களாவார். இந்திரகுமார நாடகம் பாடியவரும் அவரே (ஈழகேசரி 16-8-1936)

அருளம்பல முதலியாரைப் போலவே குமாரசுவாமி முதலியாரும் தமதூரில் ஒரு பள்ளிக்கூடத்தை ஸ்தாபித்து நடத்திவந்தார். உடுப்பிட்டி, திருவல்லை, குமாரசுவாமியார் பள்ளிக்கூடம் என்னும் பெயருடன் அப்பள்ளிக்கூடம் நடந்துவந்தது. 1841, 1842ம் ஆண்டுகளில் அங்கு கல்விகற்ற, கற்பித்தவர்களும் பின்வருவோரின் இலக்கண இலக்கிய படிதங்கள் உதயதாரகை இதழ்களை அலங்கரிக்கின்றன.

சுப்பர் கணபதிப்பிள்ளை, கு. கதிரைவேற்பிள்ளை, ஐயா தந்தவன் பரமசாமிஐயர்.

முதலிமாரின் நன்கொடைகள்

தாங்கள் இருவரும் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபித்து நடத்திவந்ததோடு நில்லாது அமெரிக்க மிஷனரிமாரும் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்க நிலங்கள் நன்கொடையாக வழங்கியதாக உதயதாரகை (1-12- 1842) இதழ்கூறும்.

'செல்வத்திலேயும் கல்வியிலேயும் அதிக மேம்பாடுள்ளவர்களாகிய மகாகனம் பொருந்திய ஸ்ரீ, ஸ்ரீ. உடுப்பிட்டி. அருளம்பல முதலியார் அமெரிக்க குருமாருக்கு 45பரப்புத்தறை வல்லைவெளியிலே கொடுத்திருக்கிறார். இன்னும் மகாகனம் பொருந்திய ஸ்ரீ ஸ்ரீ. உடுப்பிட்டி. திருவல்லை, குமாரசுவாமி முதலியாரும் 150 பரப்பு (விளைநிலத்துடனே) மிசியோனுக்குக் கொடுக்க விருப்பம் தெரிவித்திருக்கிறார்.

வல்லிபட்டியில அமெரிக்கமிஷன் ... லமாய் விளங்கும் "வரிக்காடு" என்னும் ஆதனத்தை அமெரிக்க மிஷன் சங்கத்திற்குக் குமாரசுவாமி முதலியார் நன்கொடையாக அளித்தனர் (யாழ்ப்பாணக் கல்லூரி சஞ்சிகை, மார்கழி 1936, பக் 51-54)

உடுப்பிட்டி, அமெரிக்கன்மிஷன் கல்லூரிக்குரிய விளையாட்டுநிலம் "சண்முகவளவு" எனப்படும். அந்த இரண்டு ஏக்கர் காணியையும் அருளம்பல முதலியாரின் சகோதரர் மயில்வாகனமுதலியார் அமெரிக்கமிஷன் சங்கத்துக்குத் தருமசாதனஞ் செய்தனர் என அறிகிறோம்.

தனியார்துறைக் கல்விமுயற்சிகள்

வண்ணார்பண்ணையில் அங்கொன்றும் இங்கொன்றுமாக ஒவ்வோர் ஆசிரியரிடம் பிள்ளைகள் கற்று வந்தனர் என முந்திய கட்டுரையிற் (ஈழநாடு 2-4-1971) கூறினோம். அப்படியாகக் கற்பித்து வந்தவர்களுள் ஒருவராகிய தில்லையம்பலவாணச் செட்டியார் பற்றிய உதயதாரகைச் செய்தியொன்று வருமாறு

"யாழ்ப்பாணத்தைச் சார்ந்த வண்ணை நகரின் கண் அகத்தியம், தொல்காப்பியம், இராமாயணம் முதலிய சகல நூல்களிலும் வல்லவரும், சொல்லவரின் வண்ணை நகரில் மாணாக்கர் அனைவர்க்கும் உபாத்தியாயராயிருந்த ம. ஸ்ரீ. ஸ்ரீ. தில்லையம்பலவாணச் செட்டியார் அவர்கள் இந்த மாதம் 30-ந் தேதி (30-10-1842) அவருடைய மாணாக்கர் அனைவரும் துக்கசாகரத்தில் அழுந்திப் புலம்புகிறோம். அன்றியும் அவரைக்களஞ்சியமாகக் கண்டு தங்கியிருந்த மேற்குறித்த கல்விகளும் நிலைதளம்பி இருப்பிடமற்று இனிமேல் எவன் நம்மைத் தன்மனைக்கத்தின் கண்ணே சேர்த்துவைக்கத்தகுந்தவ னென்று புலம்பித் தெருக்கள்தோறும் கூடுவைத்து கலைந்த ஈக்களுக்குச் சரியாய் ஸ்தாபித்தோடு திரிகிறதென்று சொல்லவுந்தகும்.

[உதயதாரகை 3.8.1842, பக். 261]

1842-ம் ஆண்டு வண்ணார் பண்ணையில் ஸ்தாபிக்கப்பட்ட வேதாகமப் பள்ளிக் கூடத்தில் இலக்கண இலக்கியம் படிப்பிக்கிறதற்கு வட்டு நகர் சாஸ்திரப் பள்ளிக்கூடத்து முன்னு வாத்தியாராயிருந்த ஆராவிச்சவிமுகசுட்டம்பியார் நியமிக்கப்பட்டாரென முந்திய கட்டுரையிற் கூறினோம். அவருடைய சிறிய சரித்திரம் உதயதாரகை (11-1-1849) இதழில் தரப்பட்டுள்ளது. அதன்படி ஆராயுங்கால் அவர் வட்டு நகர் சாஸ்திரப் பள்ளிக்கூடத்தைவிட்டு விலகியபோது தன் பிழைப்புக்காக ஒரு சிவசமயப்பள்ளிக் கூடத்தை ஸ்தாபித்து அனேகம்மாணாக்கரைப் படிப்பித்து மன்றித் தாமும் ஆகம நூல்களை ஆராய்வுடன் வாசித்துத் தியானம் பண்ணிச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் சதுர்ப்பாதங்களின் மேனிலையை அடைந்தவராகவுமிருந்தாரெனக் கூறப்படுகிறது. இச்சிவசமயப் பள்ளிக்கூடம் வேதாகமப்பள்ளிக்கூடத்துக்கு முந்தியதுபோல் தெரிகிறது. எங்கே ஸ்தாபிக்கப்பட்டது எவ்வளவு காலம் நிலைத்திருந்தது என்பன தெரியவில்லை.

வளவெட்டி, மல்லாகம் முதலியவிடங்களில் மாணாக்கர்களைச் சேர்த்து இலக்கண இலக்கியம் கற்பித்துவந்தாரென யாழ்ப்பாண வைபவ கௌமுதி (பக் 247) கூறும் வாழையடி வாழையாய்ப் பிறா (வட்டுக்கோட்டை சுவாமிநாதப்புலவர்), பாட்டன் (வட்டுக்கோட்டை, முத்துக்குமாரப் புலவர்) முப்பாட்டன் தொட்டு வித்துவான்கள் வமிசத்தில் பிறந்த இவர், இறப்பதற்கு இருவருடங்களுக்கு முன்ஞானவி நாமம் பெற்று நாவாணியென் என்னும் பெயரையும் (17.8.1847) ஏற்றுக்கொண்டார்

1794-ம் ஆண்டளவில் பிறந்த இவர் 6-1-1849-ல் இறந்ததாகக் கூறப்படுகிறது.

(8-ம் பக்கம் பார்க்க)

சிங்களை

1-ம் பக்கத் தொடர்ச்சி

லை அரசாங்கத்திருக்க நிறைவேற்றப்பட்ட சட்டங்கள் தான் இன்று நடைமுறையில் இருக்கின்றன; இதனால்தான் இப்பிரச்சினை தலைதூக்கியிருக்கிறது என எண்ணவிடாதீர்கள். இப்பிரச்சினைபற்றி ஆராயப்பட்டுவருகிறது.

கடந்த அரசாங்ககாலத்தில் தான் இந்நிலை ஏற்பட்டதா? அதற்கு முன்னரே ஆரம்பிக்கப்பட்டது? உங்கள் எம். பி. எடுத்த துரித நடவடிக்கையினால் தான் இவ்வேலை நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

கொள்கையில்தான் மோதல்!

அரசியல் கொள்கைகளில் வேறுபாடிருந்தாலும், இப்படியான பொது நிகழ்ச்சிகளில் மக்கள் ஒற்றுமைப்பட வேண்டும். அரசியல் என்பது கொள்கை மோதல். அது மக்களிடையே மோதல் ஏற்படக்கூடாது. கொள்கையில் பல பாதைகளைக் காட்டிலுந்தான் மக்கள் சரியான பாதையைக் கண்டுபிடிப்பார்கள் அரசாங்க அதிகாரிகள் மக்களின் நன்மைக்காகவே செயல்படுகின்றனர். தேர்தல்வரைதான் மோதல்கள் இடம்பெறும். தேர்தல் முடிந்தபின் எல்லாக்கட்சிகளும் சேர்ந்து மக்களின் நன்மைக்காக, பொருளாதார வளர்ச்சிக்காக பாடுபடவேண்டும். தேர்தலுடன் கொள்கை மோதல் முடிவடையவேண்டும்.

சங்கத்தின் கோரிக்கை

யாழ்ப்பாணம், வெள்ளி பாழ் மாவட்ட கூட்டுறவு துறைமுகசேவை சமாஜத்தின் பொதுக் கூட்டத்தை கூட்டுவது முறையல்லவென்றும் கூட்டுறவு ஆணையாளரே அக் கூட்டத்தை கூட்டும்படியும் யாழ் மக்கள் துறைமுகத்தொழிலாளர் பொதுச் சேவைக் கூட்டுறவுச் சங்கம் கோரியுள்ளது.

லீலா பஞ்சாங்க சித்திரக் கலண்டர்

1972 டிகதி பெரிய இலக்கத்தில்

இதோ! வியாபாரத்திற்கு அனுப்பத் தயாராகி விட்டது விலைப்பட்டியல் கேட்டு, எழுதி ஆடர் செய்யவும்.

★ திகதி பெரிய இலக்கத்தில்

★ நூற்றுக்கு நூறு புது அமைப்படங்கள்

★ 366 திகதி இதழ்களிலும் புரட்சிகரமான மாற்றங்கள்

★ இலங்கையில் - இந்தியாவில் தோன்றி மறைந்த பெரியார்கள், யோகிகள், ஞானிகள், சித்தர்கள், பித்தர்கள், அரை நிர்வாண தாரிகள், கௌபீனதாரிகளை லீலா கலண்டரில் தரிசியுங்கள்.

★ இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ சமயங்களுக்கு ஏற்ற அமைப்படங்கள்.

★ தெய்வப் படங்கள்: ஜகத்குரு காஞ்சி காமகோடி சங்கராச்சாரியார். (இராமர், அநுமார், நாரதர், வள்ளி திணைப்புனம், ஆனைமுகன், ஆறுமுகன், தாத்தா இவர்களின் தோற்றங்களை ஒரே படத்தில் காணலாம்) சாயிபாபா போன்ற பல புதிய படங்கள்.

★ முஸ்லிம் இல்லங்களை அலங்கரிக்க இஸ்லாமிய சமய பண்புக்கேற்ற பல படங்கள்; படத்திற்கேற்ற மணிமொழிகள்.

★ கிறிஸ்து சமய: பரிசுத்த பாப்பாண்டவர், அதிமேற்றிராணி யாரும் குறே அவர்கள். தட்டுங்கள் திறக்கப்படும், தொழில் மகிமை அறிந்த திருக்குடும்பம், கற்பைக் காத்த கன்னி மரிய கொறற்றி, பாமுகனுக்குக் கண்ணீந்த புனித லூசியா போன்ற பல நவீன படங்கள்.

★ தலைவர்கள்:- பிரதமர் இந்திரா காந்தி, முன்னாள் முதல்வர் அண்ணா முதல்வர் கருணாநிதி போன்ற இன்னும் பல தலைவர்களின் படங்கள்.

1972 லீலா கலண்டர் ஓர் புரட்சித் தயாரிப்பு

12 வருட பூர்த்தி [மாமாங்க] வெளியீடு!

நியூ லீலா அச்சகம் | 33, சன் செபஸ்தியன் மேடு, கொழும்பு-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'புதிய கல்வித்திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும்'

யாழ்ப்பாணம், வெள்ளி வெளிமாகாணங்களிலுள்ள ஆசிரியர்களின் காலி இடங்களுக்குப் புதிய தமிழ் ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் அகில இலங்கை அரசினர் பாடசாலைத் தமிழர் ஆசிரியர் சங்க குருநாகல் கிளை மகாநாட்டில் ஏகமனதாக நிறைவேறியது.

இம்மகாநாட்டில் மேலும் சிலவும் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. ஒரே தகுதிகாண் அடிப்படையிலும் சேவை அடிப்படையிலும் ஆசிரியர்கள் நியமனமும் பதவி உயர்வும் செய்யப்படவேண்டும்.

கல்வி அமைச்சரின் புதிய கல்வித்திட்டத்திற்கு பாராட்டுதல் தெரிவிப்பதோடு அத்திட்டம் நிறைவேறுவதற்கு எங்களின் சகல ஒத்துழைப்பையும் நல்குவதற்கு உறுதி அளித்தல் வேண்டும்.

இச்சோஷலிஸ அரசாங்கத்தால் கொண்டுவரப்படும் சகல முற்போக்குத் திட்டங்களுக்கும் எமது பூரண ஆதரவை அளித்தல்வேண்டும்.

தொடர்ச்சியாக சொந்த மாவட்டங்களில் கடமையாற்றும் ஆசிரியர்கள் குறைந்தது 5 வருடமேனும் வெளிமாகாணங்களில் சேவைசெய்ய வேண்டும் என்ற திட்டம் கொண்டு வரப்படவேண்டும்.

## யாழ். ஆபரணத் தொழிலாளர் சங்கம்

யாழ்ப்பாணம், வெள்ளி யாழ்ப்பாணம் ஆபரணத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்க முதலாவது வருடாந்தப் பொதுக்கூட்டம் சங்கக் காரியாலயத்தில் நடைபெற்றது. புதிய வருடத்திற்குரிய உத்தியோகஸ்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்: க. சி. பொன்னுத்துரை. தலைவர்: மு. பொன்னுச்சாமி. காரியதரிசி: சா. இராஜேந்திரன். தனாதிகாரி: பொ. நாகராசா. உபதலைவர்: க. செ. கந்தையா. உபகாரியதரிசி: வே. கந்தசாமி.

நிர்வாகசபை உறுப்பினர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்: வே. கனகரத்தினம், மு. இரத்தினம், க. இராசரத்தினம், த. சதாசிவம், வை. ஆசைப்பிள்ளை, க. நாராயணன், ச. கந்தசாமி, ச. தருமலிங்கம், நா. முருகன், இ. பரமானந்தம்.

## நியமனம்

பருத்தித்துறை, வியா பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர் திரு. வீ. இராசநாயகம் உடுவில் வட்டாரக் கல்வி அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்

புலோலி இந்துக்கல்லூரி ஆசிரியர் திரு. பீ. சபாரத்தினம், சாவகச்சேரி மத்திய மகாவித்தியாலய அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## நூல் வெளியீடு

பருத்தித்துறை, வியா பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆசிரியரான பண்டிதர் க. வீரகத்தி எழுதிய "கடலும் படகும்" என்ற நூல் வடமராட்சி இளம் எழுத்தாளர் மன்றத்தினரால் இங்கு வெளியிடப்பட்டது. கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி அதிபர் திரு. பொன். கணேசன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பண்டிதர் ஞ. க. வைரவநாதர், பண்டிதர் பொன். கிருஷ்ணபிள்ளை, வித்துவான் சபாரத்தினம் ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்தினர்.

## நடமாடும் விஞ்ஞானப் பொருட்காட்சி

வேதீஸ்வரம், வியா மன்னார்ப் பகுதிக் கல்வி ஆலோசகர் திரு எம் பாலசிங்கம் நடமாடும் விஞ்ஞானப்பொருட்காட்சியை மன்னார் அல் அஸ்ஹர் மகாவித்தியாலயத்தில் திறந்துவைத்து உரையாற்றினர்.

அவர் தமது பேச்சில் இன்றைய நவீன உலகில் விஞ்ஞானக் கல்வியானது பல வழிகளிலும் வளர்ச்சிக்கு உதவுகிறது என்றும் அதன் முக்கியத்துவத்தை உணர்ந்தாகவேண்டுமெனவும் குறிப்பிட்டார்.

# மண்ணைப் பேணுங்கள் என்கிறார் விவசாய அதிபர்

யாழ்ப்பாணம், வெள்ளி "வடமாகாணத்து மண்ணைப் பொன்னை மதித்துப் பேணவேண்டும்; குறிப்பாக துணுக்காய், வவுனிக்குளம் போன்ற இடங்களிலுள்ள மண் பெறுமதியானது; விவசாயிகளுக்குக் கிடைத்த பொக்கிஷம்."

இவ்வாறு வடமாகாண விவசாய அதிபர் திரு பொ. மாணிக்கவாசகம் தெரிவித்துள்ளார்.

விவசாயிகளுக்கென வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் அவர் இவ்வாறு தெரிவித்திருக்கிறார் மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது-

"பூநகரிப் பகுதி மண்தான் இலங்கையில் உள்ள மண் வகையில் சிறப்புடையது ஆனால் நீர்ப்பாசன வசதியற்ற பகுதியாகும். அந்தப் பகுதி மண்ணில் 'ஜிப்சம்' என்ற உவர் மண்ணைக் கலந்து கழி போட்டுக் கமம் செய்தால் அதிக விளைச்சலைப் பெற வாய்ப்பாகும்.

மணல் கண்டம், உவர்க் கண்டம், களிக் கண்டம், சண்ணாம்புக் கண்டம் முதலிய மண்களுக்கேற்ற நெல் விதைக்க இப்போதைய அரசு விதை நெல் வகையைப் பெருக்கியுள்ளது.

சணல் விதைத்து வயலைப் பண்படுத்துவதாலும், அதிக நெல்லைப் பெறுவதோடு சணலையும் விற்றுப் பணமாக்க முடிகிறது. இந்நாட்டின் மண் செல்வத்தை விவசாயிகள் ரத்தையுடன் பேணவேண்டும்."

விவசாய அதிபரது சுற்று நிருபம் எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் பயிர்ச் செய்கைக் குழுக்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன. இவற்றின் விபரங்களை மேலும் அறிய விரும்பும் விவசாயிகள் அப்பகுதி விவசாய விரிவாக்க அதிபரிடமும், போதனாசிரியரிடமும் அறியலாமென்றும் குறிப்பிட்டுள்ளார். [குவிம]

## இப்பகுதிகளுக்கும் மின்சாரம் வழங்குக'

குடுதகர், புதன் பின்தங்கிய கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கும் திட்டத்திற்கமைய கோப்பாய்த் தொகுதியிலுள்ள வாதரவத்தை, புத்தூர், நவக்கிரி, நீர்வேலி ஆகிய கிராமங்களுக்கும் மின்சாரத்தை விஸ்தரிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோப்பாய்த்தொகுதி எம்.பி. திரு. எஸ். கதிரவேற்பிள்ளை வடபிரதேச மின்சாரசபையைக் கோரியுள்ளார்.

## ரூ. 31 கோடி தேவை

கொழும்பு, வியாழன் ரயில்வேசீர்திருத்தத்துக்கு அடுத்த ஐந்தாண்டுகளில் 31 கோடி ரூபாய் தேவைப்படுமெனக் கணக்கிடப்பட்டுள்ளது.

## இன்றைய பலன்

ஐப்பசிமாதம் 12ந்திகதி
29-10-71

மேஷம்- ஆனந்தமும் ஆத்திரமும் கலந்த நிலையில் அவதிப்படுவீர்கள்; தெய்வ நம்பிக்கை வேண்டும்.

ரிஷபம்- எதையும் ஒழுங்கு முறையாகச் செய்வதில் திருப்தியடைவீர்கள்; மேற்றோரின் பூரணகட்டுப்பாட்டுக்கிழ் பிள்ளைகள் நடப்பர்.

மிதுனம்- கைத்தொழில் விருத்திக்கு இடமுண்டு; மூதுவர் ஒருவரின் அறிவுரைகள் முன்னேற்றத்தை அளிக்கும்.

கடகம்- இதுவ்படாத சம்பவமொன்று மீண்டும் நினைவுக்குவந்து வேதனையைத் தரும்; மின்னியல் பகுதியில் கடமையாற்றுபவர்கள் அதிக கவனத்துடன் இருக்க வேண்டும்.

சிம்மம்- இல்லத்தில் சுவையான நிகழ்ச்சிகள் இடம்பெறும்; நாடகக்கலைஞர்களுக்கு இன்று வெற்றித்தினம்.

கன்னி- பலவழிகளிலும் பணம் செலவாவதற்கு இடமுண்டு; கட்டுப்பாட்டுடன் நடக்கவும்.

துலாம்- பொதுமக்களின் ஆதரவு வளர்வதற்கு இடமுண்டு; முன்னாள் ஆசிரியர் ஒருவர் உங்கள் முன்னேற்றத்திற்கு உதவுவார்.

விருச்சிகம்- முன்னாள் மேலதிகாரி ஒருவர் உங்கள் வெற்றிக்கு துணைநிற்பார்; தொழில்துறையில் முன்னேற்றமுண்டு.

தனுசு- செலவுக்கு வேண்டிய பணம் தாராளமாகக் கிடைக்கும்; உடல் நலத்திலும் முன்னேற்றம் காணப்படுகின்றது; நல்ல தினம்

மகரம்- சகோதரவழி மூலம் சஞ்சலமான செய்தியும் கிடைக்கலாம்; உடல் நலத்தைப்பேணவும்.

கும்பம்- எதையும் தாமதம் இதனத்துடன் செலவாதின் நிலைமையைச் சமாளிக்கமுடியும்; சமாரான தினம்.

மீனம்- குடும்பவாழ்க்கையில் சமரசம் நிலவும்; உங்கள் பேச்சுக்கு மற்றவர்கள் பெருமதிப்புக் கொடுப்பர்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை


# வெள்ளை ஆடைகளை எவ்வளவுதான் கழுவினலும் பரிபூரண வெண்மையை அடையமுடியாது. உங்களுக்குத் தேவையானது றெபின் நீலம்!




சலவைத்தூளும் சவர்க்காரமும் வெள்ளை ஆடைகளைச் சுத்தமாக்குவது உண்மைதான்.

ஆனல் ஆடைகளை எவ்வளவுதான் கழுவினலும் அது உண்மையான வெண்மையைத் தந்துவிடாது — இங்குதான் உங்களுக்கு றெபின் நீலம் தேவை.

றெபின் நீலம் கலப்பில்லாத சலவை நீலம். அது வெள்ளை ஆடைகளைப் பளபளப்பாக்கச் செய்கிறது. வெண்மை இழந்த ஆடைகளுக்கு வெண்மையை மீட்டுத் தருகிறது.

உங்கள் ஆடைகளை வழமைபோல் சலவை செய்யுங்கள். ஆனல் முடிவில் றெபின் நீலத்தில் தோய்த்தெடுக்க மறவாதீர்கள். ஆடைகளுக்கு வெண்மையையும், பளபளப்பையும் கொடுப்பதற்கு நிச்சயமான சுலபமான வழி இதுவே!

ஆடைகள் வெண்மையாகப் பளபளப் பாகப் பிரகாசிக்க றெபின் நீலம் பாவியுங்கள்.

ஆர் றெக்கிட் அண்ட் கோல்மன் உற்பத்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் ஆசிரியர்கள்

# "நாட்டின் எப்பாகத்திலும் சேவைசெய்ய முன்வரவேண்டும்"

யாழ்ப்பாணம், வெள்ளி
தமிழ் ஆசிரியர்கள் இந்த நாட்டின் எந்தப் பாகத்திலும் சேவைசெய்யத் தயாராக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் நம் மொழியை நாம் வளர்த்து இந்நாட்டில் உரிய இடத்தைப் பெறமுடியும்.

அகில இலங்கை அரசினர் பாடசாலைத் தமிழாசிரியர் சங்க குருநாகல் கிளையின் வருடாந்த மகாநாட்டில் கிளைத்தலைவர் திரு. வீ. நடேச பேசும் போது மேற்கண்டவாறு கூறினார்.

குருநாகல் புனித இமானுவேல் கல்லூரியில் நடந்த இம்மகாநாட்டில் திரு. நடேசு மேலும் கூறியதாவது:—

எழுத்தறிவித்தவன் இறைவன் என்ற முதுமொழிக்கேற்ப உன்னத நிலையில் இருப்பவர்களே ஆசிரியர்கள். வருங்கால சிற்பிகளை அறிஞர்களை, அரசியல் வாதிகளை, மேதைகளை, விஞ்ஞானிகளை உருவாக்குபவர்களும் அவர்களே. ஒரு நாட்டினை, ஒரு சமுதாயத்தினை, ஒரு சந்ததியினரை அழிக்கவும் ஆக்கவும் சக்தியடைத்தவர்கள் இவர்கள் மட்டுமே. ஆசிரியர்களின் சக்தியே எத்தனையோ இராச்சியங்களை அழித்துப் புதிய யுகங்களை ஏற்படுத்தியிருப்பது வரலாறு காட்டுகின்ற உண்மை. இவ்வாறான சக்தியடைந்த ஆசிரியர்கள் தங்கள் புனிதமான விசுவாசமான சேவையின் மூலமாக இந்நாட்டின் முன்னேற்றத்திற்கும் வருங்கால சந்ததியினரின் வளர்ச்சிக்குமாக விசுவாசத்துடன் பணியாற்றவேண்டும்.

நீண்டகாலமாக அந்நியர் ஆதிக்கத்தில் அடிமைப்பட்டிருந்து தம்மொழியை வளர்க்க முடியாதிருந்த இந்நாட்டுமக்களுக்கு தேசிய அரசாங்கங்கள் சுயமொழி போதனை திட்டத்தைக் கொண்டுவந்து இந்நாட்டு தாய்மொழிகளை வளர்ப்பதற்கான பெரும் பேற்றினைப் பெற்றுக் கொடுத்தன. இதன் மூலமாக இன்று தமிழும் சிங்களமும் சகல துறைகளிலும் வளர்ச்சியுற்று வருகின்றன. இவ்வரிய பேற்றினைப் பெற்ற ஆசிரியர்கள் தம் தாய்மொழியை வளர்ப்பதற்கு அயராது பாடுபடவேண்டும் சாதி மத அரசியலுக்கப்பாற்பட்டு ஆசிரிய சமூகம் இப்பணியினை கண்ணியமான முறையில் செய்யத் தயங்கக் கூடாது.

இன்றைய சோஷலிச அரசாங்கத்தில் நாம் இழந்த உரிமைகள் அனைத்தினையும் பெற்றதோடு தொழிற்சங்க ரீதியில் ஒன்றிரண்டு தங்கள் உரிமைகளை நிலைநாட்டி வருகின்றனர். ஆசிரியர்களின் இடமாற்றம், பதவி உயர்வு போன்ற விடயங்களில் ஆசிரிய சங்கங்களின் குரலுக்கு முக்கிய இடமளித்துள்ள இவ்வரசாங்கத்திற்கு ஆசிரிய சமூகம் ஆதரவளிக்க வேண்டியது அதன் தலையாய கடனாகும். இதுகால வரையும் இருந்துவந்த கல்வித்திறன் குறைபாடுகளினால் ஏற்பட்டுள்ள வேலையில்லாப் பிரச்சினை போன்றவற்றிற்கு பரிகாரம்காணும் வகையில் கல்வி அமைச்சரினால் கொண்டுவரப்படும் புதிய தொழில் விஞ்ஞானக் கல்வித்திட்டத்துக்கு ஒவ்வொரு ஆசிரியரும் பூரண ஒத்துழைப்பை வழங்கவேண்டும்.

பெரும்பாலான தமிழ்ஆசிரியர்கள் வடபகுதியில் மட்டுமே வேண்டுமென்ற சுயநலநோக்கம் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். இப்படி எல்லா தமிழ் ஆசிரியர்களும் வடபகுதியிலேயே சேவை செய்வதாக இருந்தால் வெளிமாகாணங்களிலுள்ள தமிழ்ப்பாடசாலைகளைப் படிப்படியாக மூடவேண்டிய நிலை ஏற்படுவதோடு எமது சமூகத்திற்கு இருக்கக்கூடிய வேலைவாய்ப்புகளை நாம் குறைத்து சற்றில் இல்லாமலே செய்தவர்களாவோம். இக்குறுகிய சுயநல மனப்பான்மை நீங்க வேண்டும்.

தமிழுக்கும் சிங்களத்திற்கும் உரியஇடமளிக்க வேண்டுமென இருமொழிக்கும் விழாஎடுக்கிறது இன்றைய அரசு. இப்படியான ஒரு சூழ்நிலையை நாம் பயன்படுத்தி சிங்களச் சகோதர ஆசிரியர்களோடு நாம் ஒன்றிணைந்து எமது பணியை நாட்டின் நலனுக்காக ஆற்ற வேண்டும்

குருநாகல் மாவட்டத்தில் உள்ள சகல தமிழ் ஆசிரியர்களும் பங்குபற்றிய இவ்விழாவில் ஜாதிக குருசங்கத்தின் குருநாகல் மாவட்டத் தலைவர் திரு. தர்மதாச ஹெட்டிகே பேசும்போது ஆசிரிய சங்கங்களின் முக்கியத்துவத்தைப் பற்றியும் அவைகள் ஆற்றிவரும் சேவை பற்றியும் விளக்கினார்.

## ஒவ்வொரு அமைச்சுக்கும் நிதிக்கட்டுப்பாட்டுச்சபை

கொழும்பு, வியாழன்
ஒவ்வொரு அமைச்சிலும், அரசாங்க இலாகாக்களிலும் நிதிக் கட்டுப்பாட்டுச்சபை இயங்கும். அரசாங்கம் இப்படியான ஒரு திட்டத்தை அடுத்த ஜனவரி முதல் அமுலுக்குக் கொண்டுவரவிருக்கிறது.

புதிய வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்படு நிதி ஒழுங்கான முறையில் பயன்படுத்தப்படுவதற்கான நடவடிக்கைகளை இந்த நிதிக் கட்டுப்பாட்டுச் சபை கவனிக்கும்.

ஒதுக்கப்படும் நிதியில் ஒவ்வொரு சதமும் மிகவும் பயன்தரத்தக்க வகையில் செலவு செய்யப்படவேண்டுமென்பதே இச்சபை நிறுவப்படுவதன்நோக்கமென்று மந்திரிசபை வட்டாரம் தெரிவித்தது.

இலாகாத் தலைவரே இந்தச் சபையின் தலைவராகப் பணியாற்றுவார். பத்துப் பேர் இந்தச் சபையில் அங்கத்தவராக நியமிக்கப்படுவார்கள்.

## 1974 லிருந்து ஆசிரியர்க்கு சமசம்பளத்திட்டம்

அம்பலாங்கொடை, வியாழன்
1974-ம் ஆண்டிலிருந்து அவர்களது வேலைக்கேற்ப எவ்வித வேறுபாடில்லாது சமசம்பளத்திட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்படுமென்று கல்வி அமைச்சின் நிரந்தரச் செயலாளரும், கல்விமா அதிபருமான டாக்டர் பிரேமதாஸ உடகம தெரிவித்தார்.

அம்பலாங்கொடை தர்ம அசோகா பாடசாலை பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட டாக்டர் உடகம மேலும்பேசுகையில், ஆங்கில பயிற்சி ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளம் போன்று மற்றைய மொழிப்பயிற்சி ஆசிரியர்களுக்கு இப்போது வழங்கப்படுவதில்லையென்றும், இதனால் இந்தச்சம்பளத்திட்டத்தில் உள்ள வேறுபாடுகள் 1974-ம் ஆண்டிலிருந்து அகற்றப்பட்டுவிடுமென்றும் அவர் கூறினார்.

புதிய கல்வித்திட்டம் அடுத்த ஆண்டிலிருந்து செயல்படவிருக்கிறதென்றும், இத்திட்டத்தினால் ஒவ்வொருவரும் வேலைபெறக்கூடிய வகையில் பயிற்றப்படுவார்களென்றும் கல்விமா அதிபர் தெரிவித்தார். ஆசிரியர்களையும், குமாஸ்தாக்களையும் மட்டும் இப்போதைய கல்வித்திட்டம் உருவாக்கிவந்தது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அம்பலாங்கொடை எம். பி. திரு. எஸ். சி. டி. சில்வாவும் பேசினார்.

## ரூபா 50 ஆயிரம் செலவில் புதிய கட்டிடம்

பருத்தித்துறை, வியா
புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரிக்கு மானியமாக அரசாங்கம் வழங்கிய ரூபா 50,000 இன்னும் சில நாட்களில் ஒரு சிறந்த கட்டடமாக விளங்கவிருப்பதாக மேற்படி கல்லூரி அதிபர் திரு என் மனோகரன் கல்லூரி பெற்றோர் ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் தெரிவித்தார்.

—

## விதைகிழங்கு விநியோகம்

பருத்தித்துறை, வியா.
கட்டைவேலி ப நோ. கூ. சங்கம் இதுவரை 20 தொன் விதை உருளைக் கிழங்குகளை விவசாயிகளுக்கு விநியோகித்துள்ளது. ஆனால் இவ்விவசாயிகள் சங்கத்திலிருந்தே உரம்பெறவேண்டுமென ஒரு நிபந்தனை விதித்திருப்பதாகவும் தெரிகிறது.

புத்தூர் ப நோ கூ சங்கம் மிகவிரைவில் 35 தொன் விதை உருளைக் கிழங்குகளை விநியோகிக்க விருக்கிறது

மேலும் இரு சங்கங்களும் தண்ணீர்ப் பம்புகள் ஆகிய விவசாயக் கடனுதவிகளை விவசாயிகளுக்கு அளிக்கவும் ஆரம்பித்துள்ளன.

## கூட்டுறவு சங்கங்கள் மூலம் பொருட்கள்

கொழும்பு., வியாழன்
பொதுமக்களுக்குத்தேவையான பாவனைப் பொருட்களை புனரமைப்புச் செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் விரைவில் விநியோகம் செய்யும். குறைந்த விலையில் இந்தப் பொருட்கள் விரைவாகக் கூட்டுறவு [illegible] நாடெங்கும் [illegible]

## யாழ். தெரிவுக் கோஷ்டி அநுராதபுரத்தில் மோதும்

யாழ்ப்பாணம், வெள்ளி
இலங்கை உதைபந்தாட்டச் சங்கத்தினால், மாவட்டத் தெரிவுக் கோஷ்டிகளிடையே வருடாந்தம் நடாத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் யாழ்ப்பாண உதைபந்தாட்டத் தெரிவுக் கோஷ்டி, முதல் போட்டியாக அநுராதபுரம் தெரிவுக் கோஷ்டியுடன் இம்மாதம் 31-ம் திகதி மோதுகின்றது.

இந்தப் போட்டியின்முதல் சுற்று ஆட்டம் இம்மாதம் 31-ம் திகதி அநுராதபுரத்தில் நடைபெறும். இரண்டாவது சுற்றுப் போட்டி அடுத்த மாதம் 14-ம் திகதி யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறும்.

இப் போட்டியில் கலந்து கொள்வதற்காக தற்போது பலம்கொண்ட யாழ். தெரிவுக் கோஷ்டி ஒன்று தெரிவு செய்யப்பட்டு கடந்தமூன்று வாரங்களாக கடும் பயிற்சி அளிக்கப்பட்டு வருவதாக யாழ். உதைபந்தாட்டச் சங்கக் காரியதரிசி திரு. ச கே குமாரசாமி தெரிவித்தார். (தே நி)

உதைபந்தாட்டம்

## மகாஜனா, ஸ்கந்தா வெற்றி

யாழ்ப்பாணம், வெள்ளி
யாழ்ப்பாண பாடசாலை உதைபந்தாட்டச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் கடந்த வார "ஏ" பிரிவுப் போட்டிகளின் முடிவுகள் வருமாறு:

### மகாஜனா வெற்றி

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரிக் கோஷ்டிக்கும், கொக்குவில் இந்துக் கல்லூரிக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் மகாஜனக் கல்லூரி 4—0 கோல்களால் வெற்றி பெற்றது.

### ஸ்கந்தா வெற்றி

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கும், உரும்பிராய் இந்துக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற போட்டியில், ஸ்கந்தவரோதயாக் கல்லூரி 4—0 கோல்களால் வெற்றி பெற்றது

இப்போட்டிகள் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது.

(தே நி)

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தமிழ்நிகழ்ச்சிகள்

29-10-71 வெள்ளி
(செய்திகள்: காலை 6-30, பகல் 12-45 மாலை 6-00, இரவு 9-00)

294 மீ சுகள் 59 மீ காலை 6-15 நாதாஞ்சலி, 6-20 சைவநற்சிந்தனை, 6-25 இஸ்லாமியநற்சிந்தனை, 7-00 இசைச்சித்திரம், 7-15 பண்ணுரித்தமிழ், 7-45 குரல் வகை, 8-00 இஸ்லாமிய நிகழ்ச்சி.

இரவு 6-10 வாத்தியஇசை 6-15 பெலிசாரும் நாமும், 7-00 வெண்ணுலகம், 7-40 முத்திநெறி 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-40 பாட்டு 10-30 செய்தித் தொகுப்பு.

ஒட்டுசுட்டானில்

## பண்டார வன்னியன் விழா

யாழ்ப்பாணம், வெள்ளி
ஒட்டுசுட்டானில் பண்டாரவன்னியன் விழா இம்மாதம் 31-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படுகிறது. பண்டாரவன்னியன் கழகம் இவ்விழாவை எடுக்கிறது. ஒட்டுசுட்டான் சிவன்கோயில்வீதியில் நடைபெறும் இவ்விழாவுக்கு கழகப் போஷகர் வவனியா முன்னாள் எம். பி. திரு. தா சிவசிதம்பரம் தலைமைதாங்குவார். காலை நிகழ்ச்சிகள் பண்டாரவன்னியன் சிலை அமைந்த கற்சிலைமடுவிலும் மாலை நிகழ்ச்சிகள் ஒட்டுசுட்டானிலும் நடைபெறும்

## வட அயர்லாந்து சம்பவங்கள்

லண்டன், அக். 28
வட அயர்லாந்தில் நேற்று பல இடங்களிலும் சிறுசம்பவங்கள் நடந்துள்ளன

ஓரிடத்தில் துப்பாக்கி ஏந்திய சிலர் ஒரு பொலிஸ் சார்ஜண்டைச் சுட்டுக் கொன்றுவிட்டார்கள். பொலிஸ் காண்ஸ்டபிள் ஒருவர் காயமடைந்தார்.

இன்னொருமிடத்தில் பிரிட்டிஷ் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார். வேறொரிடத்தில் இரண்டு சிப்பாய்கள் கொல்லப்பட்டனர் பிரிட்டிஷ் காவல் நிலையங்கள் சிலவற்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களுக்குத் தாம்தான் பொறுப்பென்று தடைசெய்யப்பட்ட ஐரிஷ் குடியரசு ராணுவம் உரிமை பாராட்டியது.

## இ. மு. சங்க நிர்வாகிகள்

புங்குடுதீவு, புதன்
புங்குடுதீவு பெருங்காடு இராமமுன்னேற்றச் சங்க வருடாந்தக் கூட்டம் கிராம அபிவிருத்தி அதிகாரி திரு. மாரிமுத்து தலைமையில் நடைபெற்றது. நடப்பு வருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: மு. இராமலிங்கம், உபதலைவர்: ச கந்தப்பிள்ளை, செயலாளர்: ஆ. தாமோதரம்பிள்ளை, உப செயலாளர்: ச. சரவணமுத்து, தனாதிகாரி: க. கடுணாகரன்.

## மஜீத் பதில் அமைச்சர்

கொழும்பு, வியாழன்
மூதூர் முதலாவது எம்.பி. யும், உதவி தகவல் ஒலிபரப்பு அமைச்சருமான திரு. ஏ எல் எம் மஜீத் பதில் தகவல் ஒலிபரப்பு அமைச்சராக சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொண்டார்: தகவல் ஒலிபரப்பு அமைச்சர் திரு ஆர்.எஸ். பெரேரா நேற்று ஹங்கேரிக்குச் சென்றுள்ளார்.

## அறிவித்தல்

கன்னாகம் பல நோக்கக் கூட்டுறவுச் சங்கத்தில்.

1. 5000 க்கு மேற்பட்ட வெற்றுச் சாக்குகளும்,
2. மற்றும் கழிக்கப்பட்ட பொருள்களும்.

கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்கிருக்கின்றன. ரூபா 250/- முற்பணம் செலுத்திக் கேள்விப்பத்திரங்களைச் சங்கத்தின் அலுவலகத்தில்பெற்றுக்கொள்ள வேண்டும்.

4-11-71 வியாழக் கிழமை நண்பகல் 12 மணிவரையும் பூரணப் படுத்தப்பட்ட கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்

இங்ஙனம்
கூட்டுறவுச் சேவையிலுள்ள
க இராமச்சந்திரன்
காரியதரிசி.
3096

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

